மங்கள வைபவங்களுக்
ஏற்ற பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 06 வெள்ளிக்கிழமை (20 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 54



இலங்கைக்கு இன்று வருகை தரும் திருத்தந்தை புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அருள் பொழிந்து ஆசீர்வாதம் செய்கிறார்.

### பாப்பரசர் வருகையை முன்னிட்டு

# கொழும்பு நகரில் கடும் பாதுகாப்பு

## திரும்பிய திசைகளில் துருப்புக்கள்

கொழும்பு, ஜனவரி 20

பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரின் இன்றைய இலங்கை விஜயத்தை முன்னிட்டு முன் எப்போதுமில்லாதவாறு கொழும்பில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 15 ஆயிரம் பொலிஸாரும் அதிரடிப் படையினரும் இன்று சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

பாப்பரசரின் வைபவத்தில் கலந்து கொள்ள வரும் மதகுருமார், கன்னியாஸ்திரிகள் உட்பட அனைவரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த பாப்பரசர் தமது நான்கு நாடுகள் விஜயத்தின் இறுதிக் கட்டமாக ஆஸ்திரேலியாவிலிருந்து இன்று பிற்பகல் 3 மணிக்கு இலங்கை வருகிறார்.

ஆஸ்திரேலிய விஜயத்துக்கு முன்னர் அவர் பாப்புவாநியூகினிக்கும் பிலிப்பீன்ஸுக்கும விஜயம் செய்திருந்தார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கியதும் சம்பிரதாய முறைப்படி இலங்கை மண்ணை அவர் முத்தமிடுவார்.

விமான நிலையத்திலிருந்து வாகன பவனியில் அவரை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடாகி உள்ளது. பாப்பரசர் வருகையை முன்னிட்டு கொழும்பு நகரம் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

பாப்பரசர் எழுதிய நூல் சம்பந்தமாக இலங்கையில் சர்ச்சை கிளம்பி இருப்பதால் அவரது இலங்கை விஜயத்துக்கு சர்வதேச தொடர்பு ஸ்தாபனங்கள் அதி முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

எனினும் எந்த ஓர் எதிர்நட

( 6 ஆம் பக்கம் பார்க்க)

### பாப்பரசர் திருவுருவ படம் உள்ளே

புனித பாப்பரசரின் நான்கு வர்ண திருவுருவப் படம் இன்றைய உதயனுடன் இணைக்கப் பட்டுள்ளது.

தவறாது கேட்டு வாங்குங்கள்.

## காஞ்சி பீடாதிபதி நேற்று பதவியேற்பு!

லண்டன், ஜன. 20

தமிழகத்தில் உள்ள காஞ்சி காமகோடி பீடத்தின் 69 ஆவது பீடாதிபதியாக ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் நேற்று வைபவரீதியாகப் பொறுப்பேற்றார்.



காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சந்திரசெகரேந்திர சரஸ்வதி முக்திப்பேறு அடைந்த பின்னர், காஞ்சிபீடத்தின் பீடாதிபதியாக ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பதவியேற்றார்.

கி.மு. 482 ஆம் ஆண்டு ஸ்ரீ ஆதிசங்கரர் காஞ்சிபுரத்தில் காமகோடி பீடத்தை நிறுவினார்.

அவரது அடியை ஒற்றி 68 பீடாதிபதிகள் இதுவரை காஞ்சி பீடத்தை நெறிப்படுத்தி வந்துள்ளனர்.

நேற்று காஞ்சி சங்கரமடத்தில் இரத்தின சிம்மாசனத்தில் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளை அமர வைத்து அவருக்கு இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட தங்கக் கிரீடத்தை இளைய சங்கராச்சாரியார் ஸ்ரீ சங்கர விஜேந்திர சரஸ்வதி சுவாமிகள் சூட்டினார்.

மங்கள நாதஸ்வர இசையுடன் தொடங்கிய விழாவில் ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகள் தமது பூசையை காஞ்சிபீடக் காமாட்சி அம்மன் ஆலயத்தில் நடத்தினார்

பின்னர் சுவாமிகள் ஊர்வலமாக, அலங்கரிக்கப்பட்ட கோயில் யானைகள் முன்னே செல்ல, ஆயிரக்கணக்கான பக்தர்களின் சங்கரநாதத்துடன் மடத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பிரதமர் வாசஸ்தலத்துக்கு முன்னால் பிக்குகள் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.20

பாப்பரசரின் இலங்கை வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக நேற்று சுமார் 100 பிக்குகள் கொள்ளுப்பிட்டியில் உள்ள பிரதமரின் வாசஸ்தலத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனைத் தவிர நேற்று குறிப்பிடத் தக்க அளவு அசம்பாவித சம்பவம் எதுவும் இடம் பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாப்பரசரின் விஜயத்துக்கு எதிராக வலுத்து வந்த எதிர்ப்பைச் சமாளிப்பதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஓரளவு வெற்றி கண்டுள்ளார் என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (இ)

## இன்று எதிர்ப்பு இயக்கம் எதிலும் பௌத்த அமைப்புக்கள் ஈடுபடா

### பகிஷ்கரிக்க மட்டும் முடிவு

கொழும்பு, ஜன. 20

இன்று இலங்கை வரும் பாப்பரசருக்கு எதிராக பௌத்த அமைப்புகள் எதிர்ப்பு இயக்கம் எதிலும் ஈடுபடமாட்டா. ஆனால் பாப்பரசரின் விஜயத்தை பகிஷ்கரிக்க அவை முடிவு செய்துள்ளன.

மேற்கண்டவாறு நெதர்லாந்து வானொலி நேற்றுத் தெரிவித்தது.

பாப்பரசரின் இலங்கை விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பௌத்த அமைப்புக்களின் சம்மேளனம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்ததை அடுத்தே இன்று எதிர்ப்பு இயக்கம் எதிலும் ஈடுபடுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த சந்திப்பின் போது

( 6 ஆம் பக்கமும் பார்க்க)

## வடபகுதி யாத்திரிகர்கள் சென்ற ரயிலுக்கு இராணுவம் பாதுகாப்பு

கொழும்பு, ஜன. 20

பரிசுத்த பாப்பரசரைத் தரிசிப்பதற்காக வடபகுதியில் இருந்து புறப்பட்ட முதலாவது யாத்திரிகர் குழுவினர் கொழும்பு சென்றடைந்தனர்.

534 பேர் கொண்ட இந்த குழுவினருக்கு யாழ் ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் தலைமை வகித்தார்.

வடக்கில்இருந்து கொழும்பு செல்வதற்காக மேலும் இரண்டயிராத்துக்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் நேற்று வவுனியா வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

யாழ் ஆயர் தலைமையில் வந்த இந்த முதலாவது குழுவில் ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள், வாலிபர்கள், யுவதிகள் என பல வயதினரும் இடம் பெற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர சமாதானமே யாழ். மக்கள் அபிலாசை

### கொழும்பில்ஆயர் சௌந்தரநாயகம்

கொழும்பு, ஜன. 20

தமது பிரதேசத்தில் நிரந்தர சமாதானம் நிலவுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை யாழ்ப்பாண மக்களின் பிரதான அபிலாசையாகும்.

இவ்வாறு கொழும்பில் தெரிவித்தார் யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

வடக்கு-கிழக்கில் தொடர்ந்து மோதல் தவிர்ப்பு நல்ல முறையில் அனுசரிக்கப்பட்டு வருகிறது —

பூநகரிப் பாதையும் ஆனையிறவுப் பாதையும் மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்பதில் மக்கள் அதிக அக்கறையுடையவர்களாக இருக்கிறார்கள் —

இலங்கை வரும் பாப்பரசரை தரிசிக்க யாழ். மக்கள் அதிக ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வருவதற்கான அனுமதியை அளிப்பதற்கு 900 ரூபாவை அறவிட்ட விடுதலைப் புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சூடான் நாட்டவரை திருப்பி அனுப்பினர்

கொழும்பு, ஜன. 20

பாப்பரசரின் வருகையை ஒட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்காப் பொலீஸார் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து சூடான் நாட்டவர் ஒருவரை நேற்றுத் திருப்பி அனுப்பினர்.

இந்த நபரினால் பாப்பரசருக்கு ஊறுவிளைவிக்கப்படலாம் என்று பொலீஸார் சந்தேகித்ததே இந்த நடவடிக்கைக்குக் காரணம் ஆகும். (இ-4)

## சிட்னியில் 2 லட்சம் மக்கள்

கொழும்பு, ஜன. 20

பாப்பரசர் தனது பதினொரு நாள் பயணத்தின் மூன்றாவது கட்டமாக நேற்று ஆஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னி நகரில் சிறப்பு வழிபாடு நடத்தினார். இச்சிறப்பு வழிபாட்டில் சுமார் 2 லட்சம் மக்கள் கலந்துகொண்டனர்.

## மழையினால் குடாநாட்டில் இயல்புநிலை பாதிப்பு

### இன்றும் மழை பெய்யும்

கொழும்பு, ஜன. 20

வடக்கிலும், வடமத்திய பகுதியிலும் கிழக்கிலும் ஊவாப் பகுதியிலும் இன்றும் தொடர்ந்து மழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் நேற்று அறிவித்தது.

இதற்கிடையில் நேற்றும் காற்றுடன் கூடிய மழை பெய்ததால் குடாநாட்டில் மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டது.

வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

வெதுப்பகங்கள், பாண் விற்பனை நிலையங்களுக்கு முன்னால் பாண் வாங்குவதற்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடி நின்றனர். மாவுக்கும் தட்டுப்பாடு நிலவியது.

பாடசாலைகளிலும் மாணவர் வரவு குறைவாக இருந்தது. (இ-173)

# காணாமற்போன 8 மீனவர்களும் கடற்புலிகளினால் மீட்கப்பட்டனர்

வடமராட்சி, ஜன. 20

கடற் கொந்தளிப்பினால் பருத்தித்துறைக் கடலில் காணாமல்போன எட்டு மீனவர்களும் கடற் புலிகளினால் நேற்று பிற்பகல் மீட்கப்பட்டனர்.

பருத்தித்துறை சுப்பர் மடத்தைச் சேர்ந்த பொ. ரவிச்சந்திரன், அ. ஜெகதீஸ்வரன் ஆகியோரும், இவர்கள் சென்ற வள்ளமும், மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த சின்னவன் ஆனந்தன், நெடுந்தீவிலிருந்து இடம்பெயர்ந்த ஆனந்தன் ஆகியோரும், இவர்கள் சென்ற வள்ளமும் அம்பன்கொட்டோடை நாகர்கோயில் கடல் பகுதியிலும் —

சுப்பர் மடத்தைச் சேர்ந்த கு. மகேந்திரன், நெடுந்தீவிலிருந்து இடம்பெயர்ந்த ந. இராசன், மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த கு. குணரத்தினம் ஆகியோரும், இவர்கள் சென்ற வள்ளமும் தாளையடிக் கடலிலும் — கடற்புலிகளால் மீட்கப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை தொழிலுக்குச் சென்ற இவர்கள் கடலில் காணாமல் போனதையடுத்து கடற் புலிகளின் உதவியை மீனவர்களின் உறவினர்கள் நாடினர்.

இதனையடுத்து, நேற்றுக் காலை கடற் புலிகள் தமது படகில் சில மீனவர்களுடன் சென்று தேடுதல் நடத்தி இவர்களையும் வள்ளங்களையும் மீட்டனர். (இ-173)

### 1,950 தொன் மாவுடன் ஹபறண

யாழ்ப்பாணம்,ஜன.20

திருகோணமலைக்கு மா ஏற்றிவரச்சென்ற 'ஹபரண' கப்பல் இன்று ஆயிரத்து 950 மெற்றிக் தொன் கோதுமை மாவுடன் பருத்தித்துறைக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது'

### பொருள்கள் இறக்கும் வேலை நேற்றும் பாதிப்பு

வடமராட்சி,ஜன.20

மோசமான காலநிலை காரணமாக நேற்று இரண்டாவது நாளாக கோமாரி கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படவில்லை.

### பூகம்பத்துக்கு 4,000 பேர் பலி!

லண்டன், ஜன. 20

ஜப்பானில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற பெரும் பூகம்பத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரம் ஆக உயர்ந்துள்ளது. அறுநூறு பேர் காணாமல் போயுள்ளனர். 19 ஆயிரத்து 500பேர் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது [உ]

### முச்சந்தி முரசு



அப்ப இயற்கையும் எங்களுக்கு சதி செய்யுது பாருங்கோ...!

## தண்ணீர் தாகத்தினால் மழை நீரைக் குடித்தோம்

### மீட்கப்பட்டவர்களில் ஒருவர் தகவல்

வடமராட்சி, ஜன. 20

கடும்காற்று கடல் கொந்தளிப்பினால் கடலில்மரணப்பயத்துடன் தத்தளித்துக் கொண்டிருந்த நாம் தண்ணீர் தாகத்தினால் மழை நீரை பாத்திரம் ஒன்றில் ஏந்திக் குடித்தோம்.

பருத்தித்துறைக் கடலில் காணாமற்போய் நேற்று கடற் புலிகளால் மீட்கப்பட்ட புறோக்கர் என அழைக்கப்படும் கு.குணரத்தினம் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

[ 6 ஆம் பக்கம் பார்க்க]

### ஐ. தே. க. ஆட்சி முறைகேடுகள்:

# ஆணைக்குழு அமைப்பது குறித்து நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, ஜன. 20

கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகம், ஒழுங்கீனம் ஆகியவை குறித்து விசாரணை செய்ய விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விரைவில் நியமிக்கப்படும் என உத்தியோகபூர்வமாக நேற்று அறிவிக்கப்பட்டது.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி எல். பீரிஸ் நேற்று செய்தியாளர்களிடம் இந்த அறிவிப்பை விடுத்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவினால் விரைவில் நியமிக்கப்படவிருக்கும் இந்த ஆணைக்குழுவில் தற்போது உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ நன்றித் திருப்பலி ★

சில்லாலையின் முதல் பங்குத் தந்தை
ஆராரத்துக்குரிய

## யோசவ்வாஸ் அடிகளாருக்கு

முத்திப்பேறு பட்டம் வழங்க இருக்கும் நாளாகிய
21-01-95 சனிக்கிழமை காலை 7-30 மணிக்கு
சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில்
நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
இத்திருப்பலியில் எல்லோரும் பங்கு
கொண்டு ஆசி பெறுமாறு
அன்புடன் வேண்டுகிறோம்.

ஆலய சபையினர்
சில்லாலை

[34782]

---

மாணவர் கல்வி மேம்பாட்டு நிதிக்காக
**விடுதலைப் புலிகள்**
மாணவர் அமைப்பு நடத்தும்

## சிறப்பு நிகழ்ச்சிகள்

✶ யாழ். ஜிம்னாஸ்ரிக் கழகம் வழங்கும்
"சர்க்கஸ்" வீரதீர விளையாட்டுக்கள்

✶ ''ராஜகஸ்'' இசைக் குழுவினரின்
இன்னிசை கானங்கள்

விந்தையுமுண்டு, வித்தையுமுண்டு, இசை விருந்துமுண்டு
விரைந்து வாரீர்!

இடம்:- யாழ்/பரியோவான் கல்லூரி
(சென். ஜோன்ஸ்)

காலம்:- 21-01-1995 [சனிக்கிழமை] பி.ப. 4 மணி

அன்பளிப்பு:- 1000/-, 500/-, 100/-, 20/-, 10/-.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
- நன்றி -

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின்
கலை பண்பாட்டு அவை

மேற்படி நிகழ்வு சிறப்புற வாழ்த்தும்
**அன்புக் களஞ்சியம்**
கிட்டு சாலை, யாழ்ப்பாணம். [சி/199]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 23 — 05 — 1923

மறைவு: 20 — 12 — 1994

### திருமதி கனகம்மா இராசையா

திருமதி கனகம்மா இராசையா அவர்களின் வீட்டுக் கிரியைகள் இன்று (20-01-1995) வெள்ளிக்கிழமை நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்;
T.V. இராசையா (கணவர்)
மக்கள், மருமக்கள்

93, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(34780)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 16 — 08 — 1943

உதிர்வு: 21 — 12 — 1994

### அமரர் சின்னப்பா கதிர்காமநாதன்
(மரக்காலை, மானிப்பாய்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை பண்போடும் அறிவோடும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்
மற்றும்
குடும்பத்தினர்

சட்டுடை,
மானிப்பாய்.

(சி/198)

---

அமைச்சர் நிமால் வெளியிட்ட நம்பிக்கை:

# காங்கேசன் ஆலைகளை இயக்கினால்

# விரைவில் சிமெந்து ஏற்றுமதியாகும்

## மாதம் 75,000 தொன் மேலதிகமாகக் கிடைக்குமாம்

கொழும்பு, ஜன. 20

காங்கேசன்துறையில் உள்ள இரு சிமெந்து ஆலைகளும் மீண்டும் இயங்கத் தொடங்கினால் மாதாந்தம் 75 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்து நாட்டுக்குக் கிடைக்கும்.

இவ்வளவு சிமெந்து கிடைத்தால் அது நாட்டின் சிமெந்துத் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, சிமெந்து ஏற்றுமதிக்கும் வழிவகுக்கும்.

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்தால் நாடு பெற்றுக் கொள்ளக்கூடிய அளப்பரிய பலாபலன்களில் காங்கேசன் சிமெந்து தாராளமாக கிடைப்பதும் ஒன்றாகும்.

— இவ்வாறு கூறினார் வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

கடந்த இரண்டு வருடங்களாக உயர்ந்து வரும் சிமெந்து விலையை குறைப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக கூட்டப்பட்ட மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சிமெந்து உற்பத்தி, ஏற்றுமதி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஒப்பந்தகாரர்கள், பத்திரிகையாளர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார்.

திறந்த சந்தைப் போட்டியே விலைகளைக் குறைப்பதற்கான சாதுரியமான வழி என அரசு கருதுகிறது.

சிமெந்து இறக்குமதியாளர்கள் தாராளமாக சிமெந்தை இறக்குமதி செய்ய சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கும் அதே சமயம் —

தனியார் நிறுவனங்கள் எல்லை மீறாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக லங்கா சிமெந்து நிறுவனம், கட்டடப் பொருள்கள் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஊடாக அரசும் சிமெந்து இறக்குமதியை மேற்கொண்டுள்ளது.

ரயில் ஊடாக சிமெந்தை கொண்டு செல்வதற்கு பக்கெட் ஒன்றுக்கு 4 ரூபா ஐம்பது சதமே செலவாகுகின்றது. ஆனால் வீதிப்பாதையைப் பயன்படுத்தினால் ஒரு பக்கெட்டுக்கு இருபது ரூபா வரை தேவைப்படுகின்றது. எனவே சிமெந்தை இடத்துக்கு இடம் அனுப்புவதற்கு ரயில்களை கூடுதலாகப் பயன்படுத்துவது குறித்து போக்குவரத்து அமைச்சருடன் விரிவாக ஆராயப்பட உள்ளது.

1992 இல் 105 ஆயிரம் தொன்னாகவும், 1993 இல் 117 ஆயிரம் தொன்னாகவும் இருந்த நாட்டின் மாதாந்த சிமெந்து பாவனை 1994இல் கணிசமான அளவில் அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது.

1994 மார்ச்சில் 125 ஆயிரம் தொன்னாக இருந்த பாவனை ஒக்டோபரில் 140 ஆயிரத்து 850 தொன்னாகவும், நவம்பரில் 135 ஆயிரத்து 200 தொன்னாகவும், டிசம்பரில் 145 ஆயிரத்து 100 தொன்னாகவும் அதிகரித்தது.

புத்தளம் சிமெந்து கூட்டுத்தாபனம் 40 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்தை மாதாந்தம் உற்பத்தி செய்யும் அதேவேளை ருகுணு சிமெந்து லிமிட்டெட் நிறுவனம் மூலம் 17 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்தும் டோக்கியோ சிமெந்து நிறுவனம் மூலம் 20 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்தும், மகாவலி மரைன் சிமெந்து நிறுவனம் மூலம் 35 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்தும் மாதாந்தம் கிடைக்கின்றது.

ருகுணு சிமெந்து நிறுவனம் மாதாந்தம் சுமார் 20ஆயிரம் மெற்றிக் தொன்னை மேலதிகமாக இறக்குமதி செய்தும் மாதாந்தம் 30 ஆயிரம் மெற்றிக் தொன் அளவுக்கு சிமெந்துப் பற்றாக்குறை ஏற்படுகின்றது.

— இவ்வாறு அந்த மாநாட்டில் அமைச்சரும் ஏனைய அதிகாரிகளும் தகவல் வெளியிட்டனர்.

டோக்கியோ சிமெந்து நிறுவனத்துக்கு ஒரு பக்கெட் சிமெந்தை இறக்குமதி செய்ய 215 ரூபாவும் —

புத்தளம் சிமெந்து நிறுவனம், ருகுணு சிமெந்து நிறுவனம் ஆகியவற்றுக்கு ஒரு பக்கெட் சிமெந்துக்கு முறையே 200 ரூபாவும், 210 ரூபாவும் செலவாகுவதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் தயாரிக்கப்படும் சிமெந்தும் இறக்குமதி செய்யப்படும் சிமெந்தும் ஒரே தரத்தில் இருப்பதாக இலங்கை தர நிர்ணயச் சபை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (உ)

---

## தியாகராஜ சுவாமிகள் இசை ஆராதனை விழா

வட. இலங்கை சங்கீதசபை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை விழா நாளை சனிக்கிழமையும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.00மணி தொடக்கம் பிற்பகல் 6.30 மணிவரை நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனகலா மண்டபத்தில் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை நடைபெறும் விழாவுக்கு யாழ். கல்வி வலயம் I கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தலைமைவகிப்பார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் சிறப்புரையாற்றுவார்.

தொடர்ந்து இசையரங்கு வயலின் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு மங்கள வாத்திய இசையுடன் விழா ஆரம்பமாகும்.

சுன்னாகம் வர்த்தக சங்க தலைவர் சு. சோமசுந்தரம் மங்கள விளக்கேற்றுவார்

தொடர்ந்து இசையரங்கு நிகழ்ச்சி இடம்பெறும். (இ-17)

---

## புலிகளின் குரல் வானொலியில்

**20—01—1995**
**வெள்ளி இரவு**

★ 8-01 — கலைமஞ்சரி— அறிமுகம். அறிமுகமாகுபவை ''உயிர்ப்பூ'' ''செவ்வரத்தம் பூ'' ஆகிய வீடியோ ...ரைப் படங்களும் சுதந்திர தாகம், விடுதலைப் போர்முரசு ஆகியபாடல் ஒலிப்பதிவு நாடாக்களும். சிறுகதை— வானோசை4இல்மூன்றாவது பரிசுபெற்ற இராமநாதன் எழுதிய''பருந்துகள்'' கவிதை — வானோசை 4இல் மூன்றாவது பரிசு பெற்ற நிலாதமிழின்தாசன் எழுதிய ''தாயகத்தை நேசி'

★ 8-25—கணப்பொழுது— சி, கண்ணம்மா எழுதிய ''கேணல் கிட்டு''

★ 8-30 — செய்திகள்

★ 8-40— அரசியல் அரங்கம்—வே. பாலகுமாரன் எழுதிய ''மனிதாபிமானம் ஒரு மறைப்பாக, பரிவுணர்வு ஒரு தப்பித்தலாக''

★ 8-50—வாத்திய கானங்கள்

★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**21 — 01 — 1995**
**சனி காலை**

★ 7-03 — மாவீர வணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**வெள்ளி மாலை**

★ 5-01 சிந்தனைச் சிதறல்

★ 5-02 — எழுச்சிக்கீதம்

★ 5-10 — புதியவை

★ 5-15 — கணநேர காவியங்கள்

★ 5-30 — மண்ணின் குரல் — தயாரிப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

★ 5-40 — நேயர்கடிதங்கள்

★ 5-45 — தமிழீழ கானங்கள்

★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்

★ 6-02 — நாடகம்— தாவையூரான் எழுதிய ''ஏமாற்றம்''

★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்

★ 6-20 — [illegible]

★ 6-30—மாலை ஒலிபரப்பு நிறைவு பெறும்.

---

## நிவாரணமாக மாவும்

யாழ்ப்பாணம், ஜன. 20

இடம் பெயர்ந்தோருக்கான இலவச நிவாரண பொருள்களில் நீண்ட நாள்களுக்குப்பின் இம்முறை மாவும் வழங்கப்படவுள்ளது.

சென்ற வருடம் ஒக்ரோபர் மாதக்கடைசி இரண்டு வாரங்களுக்கும் நவம்பர் மாதமுதல் இரண்டு வாரங்களுக்குமான 20 பி, 21ஏ முத்திரைகளுக்கு பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

20 பி முத்திரைக்கு அரிசி மா, சீனி, மைசூர்பருப்பு, லக்ஸ்பிறே மற்றும் இரண்டு அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்குதீப்பெட்டியும்

21 ஏ முத்திரைக்கு மேற்குறிப்பிட்ட பொருள்களுடன் 4 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஹைலண்ட்பால்மாவும்—யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதியால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு கட்டங்களுக்குமான உலர் உணவுப் பொருள்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் விநியோகித்துமுடிக்குமாறுபல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயலக புனர்வாழ்வுப் பகுதியால் கோரப்பட்டுள்ளன. (இ-4)

---

பாப்பரசரின் விஜய கால சேவைக்கு

## யாழ். சென். ஜோண் படைப்பிரிவுக்கு அழைப்பு

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்தின்போது முதலுதவிச்சிகிச்சைச் சேவைக்காக வடமாகாண சென்ஜோண் அம்புலன்ஸின் சேவையும் கோரப்பட்டுள்ளது.

இது சப்பந்தமான அழைப்பு யாழ் பல்கலைக்கழக வைத்திய அதிகாரியும் இலங்கை சென்ஜோண் அம்புலன்ஸ் வடமாகாண கமிஷனருமான டாக்டர் எஸ்.பி.ஆர். சீர்மாறனுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நாளை 21 ஆம்திகதி கொழும்பு காலிமுகத்திடலில் பரிசுத்த பாப்பரசர் கலந்துகொள்ளும் வைபவத்தில் வடமாகாண சென் ஜோண் அம்புலன்ஸ் உறுப்பினரையும் கடமையில் ஈடுபடுத்துமாறு இலங்கை சென் ஜோண் அம்புலனஸ் நிர்வாக செயலாளர் திரு. யூ. பத்திரான அழைப்பு விடுத்துள்ளார்.

டாக்டர் சீர் மாறனும் 10 பேர் வரையிலான உறுப்பினர்களும் கொழும்பு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்குமாறு திருபத்திரான சம்பந்தப்பட்டோருக்கு கோரிக்கை விடுத்ததுடன் இது தொடர்பான பிரதிகளை யாழ். அரச அதிபருக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் அனுப்பி இருந்தார்.

---

## பிரிட்டன் அரச பரம்பரை முடிவை நெருங்குகிறது

### லண்டன் மக்கள் அபிப்பிராயம்

லண்டன், ஜன, 20

பிரிட்டனின் முடிக்குரிய அரச பரம்பரை முடிவை நெருங்கிக் கொண்டிருப்பதாகவும்—

அடுத்த நூற்றாண்டில் அது முற்றாக மறைந்து விடும் என்றும் லண்டனில் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

லண்டன் நகர மக்களிடையே நேற்று இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

டயானாவைப் பிரிந்து வாழும் இளவரசர் சாள்ஸ் விரைவில் டயானாவை விவாகரத்துச் செய்து விடுவார் என வெளியாகியுள்ள தகவல்கள் மூலம் ஏற்கனவே பாதிப்படைந்துள்ள அரச குடும்பத்தினருக்கு நேற்றைய இந்த வாக்கெடுப்பு மேலும் கவலையை அளிக்கும் செய்தியாகும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

---

### தைப் பூரத் திருவிழா

சுழிபுரம், ஜன 20

இன்று தைமாதப் பூரமாகும். அம்மன்கோவில்களில் இன்று தைப்பூரத் திருவிழா விசேட அபிசேகம், பூசைகளுடன் நடைபெறும். மாலையில் அம்பாள் வீதி உலாக்களும் நடைபெறும். (அ-28)

### தொலைக்கல்வி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஜன. 20

வேலணை தொலைக்கல்வி நிலையத்தில் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கான ''மொடியூல்'' விநியோகமும், கற்கை வட்டம் தொடர்பான விசேட வகுப்புகளும் நாளை சனிக்கிழமை முதல் யாழ் - மத்திய கல்லூரியில் நடைபெறும் — என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### மெய்கண்டான் மலர் வெளியீடு

சுழிபுரம், ஜன. 20

பண்ணாகம் மெய்கண்டான் மலர் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மெய்கண்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு. கா. நடராசா வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். (இ-28)

### விஞ்ஞான போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் நடத்தப்படும் உயர்தர விஞ்ஞான மாணவர்களுக்கான வினா விடைப் போட்டியின் வாய்மொழிப் போட்டியும், பேச்சுப் போட்டியும் நாளை சனி காலை 9 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

யாழ். வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ)

---

## B. A. (FINAL)

யாழ். பல்கலைக்கழகம் (வெளிவாரி)
விரிவுரைகள் ஆரம்பம்
**04 - 02 - 1995** (12 மணி)

**B.A. PART - I**
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களுக்கு:
S. அருள்நங்கை

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
[சி-306]

---

யாழ்ப்பாண மாநகரசபை
கட்டாக்காலி
மிருகங்களைக்

## கட்டுப்படுத்துதல்

யாழ். மாநகர சபை எல்லைக்குள் கட்டாக்காலியான ஆடு, மாடுகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதனால் போக்குவரத்துக்கும், சுகாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. ஆகவே, உரிமையாளர்கள் அவற்றைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். இவ்வேண்டுகோளை மீறுபவர்கள் விடயத்தில் மாநகரசபைக் கட்டளைச் சட்டத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1995 - 01 - 19. (சி/197)

---

யாழ்ப்பாண மாநகரசபை

## வாகன மிருகவரித் தகடுகள் - 1995

யாழ். நகரப்பகுதிகளிலுள்ள தாபனங்கள், இல்லங்கள் தோறும் மேற்படி தகடுகளை நேரடியாக விநியோகிப்பதற்கான விசேட ஏற்பாடு எம்மால் செய்யப்பட்டுள்ளது. தங்கள் ஸ்தாபனங்களுக்கும், இல்லங்களுக்கும் வரும் எமது தொண்டர்கள், மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து இவற்றினைப் பெற்று இச்செயற்பாட்டினை வெற்றிகரமாக்குவதற்கு சகலரினதும் ஒத்துழைப்பை கோருகின்றேன்.

வே, பொ. பாலசிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1995 - 01 - 19. (சி/196)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசர் திருவிஜய சிறப்பிதழ் (20 - 1 - 1995)

## சமாதான செய்தியுடன் வரும் தேவபுறா

பயணம் செய்யும் பாப்பானவர் [The Travelling Pope] என சிறப்பாக வருணிக்கப்படும் திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் தமது 63 ஆவது வெளிநாட்டுப் பயணத்தில் இன்று இலங்கை மண்ணில் பாதம் பதிக்கிறார். அவர் தமது சொந்த விமானமான அல் இத்தாலியா [டி. சி. 10) விமானத்தில் இருந்து இறங்கி முழந்தாட்படியிட்டு இலங்கையின் தலைநகர் கொழும்பு மண்ணை முத்தி செய்வதுடன் இலங்கை நாடும் திருத் தந்தையின் பயண நாடுகளின் 63 பட்டியலில் இடம் பெறப் போகிறது.

இலங்கை மண்ணுக்கு திருத்தந்தை ஒருவர் வருகை தருவது இது இரண்டாவது தடவையாகும். 1971 ஆம் ஆண்டு பாப்பரசர் 6 ஆம் சின்னப்பர் கொழும்பு விமான நிலையத்தில் தரித்து நின்று, அவருக்கு அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்பைப் பெற்று தனது அப்போஸ்தலிக்க ஆசீரை இலங்கை மண் மீதும் மக்கள் மீதும் பொழிந்தார்.

இப்போது திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் போர்த்துக்கேயரால் இலங்கை மண்ணுக்குக் கொண்டு வரப்பட்ட கத்தோலிக்க மதம் ஒல்லாந்தர் காலத்தில் அழிந்து போகும் நிலையில் இருந்த போது, தனது 24 ஆண்டு காலப்பணி வாழ்வால் இலங்கைக் கத்தோலிக்க விசுவாசத்திற்கு உயிர் கொடுத்து இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் (The Apostle of Ceylon) ஆசாரத்திற்குரிய யோசேவ் வாஸ் அடிகளுக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்க இலங்கை வருகிறார்.

புனிதர் பட்டத்தின் மூன்று நிலைகளில் ஆயரால் கொடுக்கப்படக் கூடியதான முதலாவது நிலையான ஆசாரத்திற்குரியவர் (Venerable) என்ற நிலை 1742 ஆம் ஆண்டு கொச்சின் மறை மாவட்ட ஆயரால் யோசவ் வாஸ் அடிகளுக்கு வழங்கப்பட்டது.

திருத்தந்தையால் மட்டுமே வழங்கப்படக் கூடியதான முத்திப்பேறு பெற்ற நிலை (Beartified) என்ற இரண்டாம் நிலைக்கு ஆசாரத்திற்குரிய யோசவ் அடிகளை உயர்த்தவே திருத்தந்தை இங்கு வருகிறார்.

இந் நிலை வழங்கப்பட்ட பின்னர், இவர் பிறந்த நாடான இந்தியாவிலும், சிறப்புற பணி செய்த நாடான இலங்கையிலும் மட்டுமே புனிதராக கணிக்கப்படுவார். மூன்றாவது நிலையான


அருளப்பர் சின்னப்பர்

புனிதர் நிலையை அடைய — உலகம் முழுவதிலும் புனிதராகக் கணிக்கப்படும் நிலை பெற — இன்னும் பல புதுமைகள் நடைபெறவேண்டும்.

### முக்கியத்துவம் வாய்ந்தது

திருத்தந்தையின் இலங்கை வருகை இலங்கை நாட்டு வரலாற்றிலும், கத்தோலிக்க திருச்சபை சரித்திரத்திலும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். ஏறக்குறைய 95 கோடி உலகக் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவராக, உரோமாபுரியின் ஆயராக, வத்திகான் நகரத்தின் தலைவராக, புனித இராயப்பரின் 264ஆவது வாரிசாக திருத்தந்தை விளங்குகிறார்.

''மூன்று திருத்தந்தையர்களின் வருடம்'' என அழைக்கப்படும் 1978ஆம் ஆண்டு 6ஆம் சின்னப்பர் பாப்பரசர் இறக்க, 1ஆம் அருளப்பர் சின்னப்பர் 33 நாட்கள் மட்டும் திருத்தந்தையாகப் பணி புரிந்து இறையடி சேர, 264 ஆவது திருத்தந்தையாக, ''முழுவதும் உனதே'' என்ற விருது வாக்குடன் தமது 58ஆவது வயதில் திருத்தந்தையானார். இன்று 74வயதாகும் திருத்தந்தை கடந்த 16 ஆண்டு காலமாக 95கோடி உலகக் கத்தோலிக்க மக்களின் தலைவராக இருக்கிறார்.

இவர் திருத்தந்தையானது முதல் இன்று வரை ஒரு தனித்துவமான பாப்பரசராக விளங்குகிறார். இத்தாலியர் அல்லாத முதலாவது பாப்பு என்ற பெயருடன் இவர் பாப்பரசரான போது 400 ஆண்டு கால பாரம்பரியம் உடைக்கப்பட்டது. திருத்தந்தை 6 ஆம் அதிரியானுக்குப் பின் (1522 — 1523) இத்தாலியர் அல்லாத முதலாவது பாப்பு இவரே. இரும்புத்திரை போட்ட கம்யூனிஸ்ட் கட்சி ஆதிக்கத்தில் உள்ள போலாந்து நாட்டின் முதலாவது பாப்பரசரும் இவரே. ஐரோப்பிய நாடுகளின் கிழக்கத்திய பகுதியில் இருந்து வரும் முதல் திருத்தந்தையும் இவரே. அது மட்டுமல்ல 1978ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16ஆம் நாள் தனது 58 வயதில் திருத்தந்தையான போது கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தின் முதல் இளம் பாப்பானவர் என்ற பெயரையும் இவர் பெற்றார்.

### சுரங்கத்தில் பணி புரிந்தவர்

இவரது பின்னணியும் தனித்துவமானது. கல்லுடைக்கும் சுரங்கத்தில் பணி செய்தவர். ஓர் சிறந்த நடிகன்; எழுத்தாளன்; இறையியலாளன்; மக்களை கவர்ந்திழுக்கும் சக்தி வாய்ந்தவர்.

2ஆம் அருளப்பர் சின்னப்பர் என்ற பெயரிற்கேற்ப அவரின் பணியும் வாழ்வும் அமைந்துள்ளன. புனித அருளப்பர், யேசுவால் அதிகம் அன்பு செய்யப்பட்டவர். பல திருமடல்களை எழுதினார். இரண்டாவது அருளப்பர் சின்னப்பரும் யேசுவில் அதிக அன்பு கொண்டவராக அனேக திருமடல்கள் எழுதி உள்ளார். புனித சின்னப்பரின் வேதபோதகப் பயணங்களைப் போல் இவரும் தமது 16 ஆண்டுகால ஆட்சியில் 63 வேதபோதகப் பயணங்களை மேற்கொண்டுள்ளார் தமது 63வது பயணத்தில் பிலிப்பைன்ஸ், பாப்புவாகினி, அவுஸ்திரேலியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குத் தம் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

''ரைம்ஸ்'' சஞ்சிகை சமாதானத்தின் தூதுவராக உலகப் பயணங்களை மேற்கொள்ளும் பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பரை ''1994 ஆம் ஆண்டின் பிரமுகர்'' எனத் தெரிவு செய்து கௌரவித்துள்ளது.

திருத்தந்தை எப்போதும் ஓர் சமாதானத்தின் தூதுவராகவே இருந்துள்ளார். சென்ற இடமெல்லாம் சமாதானத்திற்கான குரல்கொடுத்துள்ளார். 1995 ஆம் ஆண்டு உலக சமாதானத்தினத்தன்று தனது சமாதானச் செய்தியிலும் உலக சமாதானம் பெற சிறப்பாகப் பெண்கள் பணியாற்ற வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

திருத்தந்தையின் வருகையோடு உருவான போர் நிறுத்தம் தொடர்ந்து போரினால் இரத்தம் தோய்ந்த மண்ணில் அமைதி ஏற்பட செபிப்போம். எம் மண்ணிற்கு அமைதியும் சமாதானமும் கிடைக்க செபிக்கும் திருத்தந்தையின் பணிதொடர வாழ்த்துவோம். ★

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

## யோசேவ் வாஸ் அடிகளின் யாழ்ப்பாண வருகை

யோசேவ் வாஸ் அடிகள் இந்தியாவைச் சேர்ந்தவர். கோவாவைத் தமது பதியாகக் கொண்டவர். பிராமண குலத்தவர். கோவா நகரின் பேராலயத்தைச் சேர்ந்த ஒரு உயர் நிலைச் சமயக்குருவிடமிருந்து இலங்கைத் தீவில் கத்தோலிக்கர்படும் நெஞ்சை உருக்கும் இன்னல்களை அறிந்து கொண்டார்.

இலங்கையில் துயருறும் கத்தோலிக்க மக்களுக்குத் தாம் எப்படியும் உதவி செய்ய


யோசேவ்வாஸ்

வேண்டுமென்ற அவாவினால் தூண்டப்பட்டார். காலப் போக்கில் ஆபத்து நிறைந்த தமது திட்டத்தை நிறைவேற்றும் வழியைக் கண்டு கொண்டார். பல அபாயங்களைத் தாண்டியும் சொல்வற்கரிய இன்னல்களை அனுபவித்தும் அடிமை ஒருவனைப் போல் மாறுவேடம் தாங்கி, யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

அது 1687 ஆம் ஆண்டின் நடுப்பகுதி, யாழ்ப்பாணப் பட்டணத்தில் சில பிரமாணிக்கமான கத்தோலிக்கரை பெருமுயற்சி எடுத்தே கண்டு பிடித்தார். காரணம், அந் நாட்களில் தண்டனைச் சட்டங்களுக்குப் பயந்து, தமது சமயத்தை மறைத்து வாழ வேண்டிய நிலை கத்தோலிக்கருக்கு இருந்தது.

தமக்குப் பணிபுரியும் நோக்குடன் குறுக்கிடும் இடர் அனைத்தையும் ஏற்று; துணிந்து வந்த ஒரு கத்தோலிக்க குரவர்தான் பிச்சைக்கார வடிவத்தில் வந்துள்ளார் என்பதை அறிந்த பொழுது, கத்தோலிக்க மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. இரவு வேளை யாரும் சந்தேகப்படாத இல்லத்தில் அவர்கள் ஒன்றுகூட முடிவு செய்தனர்.

ஏறத்தாழ முப்பதாண்டு இடைவெளிக்குப் பின் திருப்பலியில் பங்குகொள்ளவும், நற்கருணை பெறவும், திருமணங்கள் குரவர் ஒருவரால் ஆசிர்வதிக்கப்படவும், குழந்தைகள் திருமுழுக்குப் பெறவும் அவர்களுக்கு வாய்ப்புக் கிட்டியது. அது அவர்களுக்கு ஆறுதலை அளித்தது.

காலப்போக்கில் பாதுகாப்புக் கருதி யோசேவ் வாஸ் அடிகள் ''சின்ன உரோமை'' யென அழைக்கப்பட்ட சில்லாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டார். அது பட்டணத்திலிருந்து சற்றுத் தூரத்தில் உள்ளது. அங்குள்ள மக்கள் மற்றையோரிலும் பார்க்கத் திடகாத்திரமாகத் தமது

( 4ஆம் பக்கம் பார்க்க)

வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை
(முன்னாள் யாழ். ஆயர்)

திருத்தந்தையே வருக!
திருவருளைப் பொழிக!!
கொண்டாட்ட வைபவங்களுக்கு
அதிவிசேட கோழிப் புரியாணி
சைனீஸ் உணவு வகைகள்
விசேஷ கவனத்துடன் தயாரித்து
உங்கள் இல்லத்திற்கே வந்து பரிமாறப்படும்
(Catering for All Occasions)
செந்தாமரை
(றிக்கோ)
370, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி வீதி)

திருத்தந்தையே வருக!
திருவருளைப் பொழிக!!
சகல வகை அழகு சாதனப்
பொருள்களுக்கும்
எங்களை நாடுங்கள்:
ஜெயா அழகு மாடம்
177A, 187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழ் மக்களின் நிலையை நன்கு புரிந்துள்ள பாப்பரசரின் வருகையால் அறம் ஓங்குக!

இன்றைய உலகில் சமாதானம், அன்பு, அகிம்சை என்பன வெறும் உதட்டுச் சொற்களாக, அகங்காரத்தை, ஆணவத்தை, அதிகார வெறியை ஆக்கிரமிப்பை மூடி மறைத்துக் கொண்டிருக்கும் சொற்களாக மாத்திரமுள்ளன.

நாடுகளுக்கிடையில் போர் வெறி, இனங்களுக்கிடையில் மோதல்கள், மக்களிடத்தில் அச்சம், அவலம், அழுகை, அவநம்பிக்கை.

இந்நிலையை மாற்றி அமைப்பதற்கு பஞ்சம், பசி, பட்டினி, அச்சம், உயிர்க் கொலை என்பனவற்றைப் போக்குவதற்கு, ''காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்'' என்ற உயரிய சமாதான நிலை உருவாவதற்கு பாப்பரசரிடமேனும் 'அன்ரி டோற்' எனப்படும் மாற்று மருந்து ஏதாவது உண்டோ என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

முன்னெக்காலத்திலுமில்லாதவாறு புனித பாப்பரசரின் அன்புப்பணி, சமாதானத் தலையீடு. நீதிக்கான அறைகூவல் என்பன மிகமிக அவசியமாகின்றன. அவரின் அன்புக்கரங்களின் எழுச்சி, சமாதான உரைகள், பிரார்த்தனைகள், உலக நாடுகளுக்கான நீண்ட பிரயாணங்கள், கண்டனங்கள் என்பன சமாதானத்தின் சார்பாக அவர் கொண்டிருக்கும் அளப்பரிய தாகத்தின் பிரதிபலிப்பேயாகும்.

ஆற்றல் படைத்த அரசுகளால் அடக்கி ஒடுக்கப்பட்டும், தங்கள் நாட்டுப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று என்பனவற்றை முன்னிட்டு வதைக்கப்பட்டும், சித்திரவதையும் சிதறடியும் விதிக்கப்பட்டும், தங்கள் பழம் பெருமையும் சுதந்திரமும் அழிந்தமையால் அழுது புலம்புமளவுக்குத் தண்டிக்கப்படும் கொடுமை எய்திய நாட்டு மக்களின் வாழ்க்கை பாப்பரசரின் அன்பும் சிவகாருண்ணியமும் ததும்பும் தலையீடுகளினால் காப்பாற்றப்பட்டு புத்துயிர் பெற்றுள்ள தென்பதை ஐரோப்பிய வரலாற்று ஏடுகளை ஊன்றிப் படிப்போர் கண்டுணர்வர்.

இம்முறை புனித பாப்பரசர், 1995ஆம் ஆண்டுக்கான தமது புத்தாண்டு மறையுரையில் ''இப்பூபந்தத்தில் இரத்த ஆற்றை உற்பத்தி செய்யும் சண்டைகளையும், அநேகர் அனுபவிக்கும் வன்முறையையும், வாழ்வைச் சுமையாக்கும் அநீதிகளையும் இனியும் சகித்துக்கொண்டிருக்க முடியாது; ஒவ்வொரு மனிதனும் ஒரு ஆள், மானிடத்தைப் பற்றிய இவ்வுண்மை ஈர்க்கப்பட்டு மனித மாண்பு வளர்க்கப்பட்டால் மாத்திரமே உறுதியான சமாதானத்தைக் காணமுடியும்'' எனக் குரல் எழுப்பியுள்ளது ஈண்டு குறிப்பிடற்பாலது.

யேசுநாதசுவாமிக்குப் பதிலாக இவ்வுலகில் மானிடரை ஆண்டு வழிநடத்தும் அதிகாரத்தை அடைந்து, அவர் பரலோக ஆரோகணராய் எழுந்தருளச் சென்ற அந்நாட் தொட்டு இந்நாள் வரையும் இடையறாச் சங்கிலித் தொடர்போல ஒருவர் பின் ஒருவராய்த் தொடர்ந்துவரும் தலையான மேய்ப்பர்களோ ''பாப்புமார்'' எனப்படுவர். ''பாப்பு'' என்னுஞ்சொல் ஐரோப்பிய பாஷைகளில் சிறுபிள்ளைகள் தங்கள் தகப்பன்மாரை பப்பா என்று அழைப்பதினின்றும் உண்டானது. தமிழில் அப்பா என்பதுவும் அதுதான். உண்மையில் பாப்பு அல்லது பப்பா என்பது அப்பா அல்லது பிதா என்பதைக்குறிக்கும்.

புனித இராயப்பரின் வாரிசாக, பாப்புமார்களின் அணி வரிசையில் 265 ஆவது பாப்புவாக - வத்திக்கான் முடி மன்னராக -அன்பும் அருளும் உரைப்பவராக - சமாதானத்தின் வெண்புறாவாகத் திகழும் நம் புனித தந்தை 2 ஆவது அருளப்பர் சின்னப்பர் போலந்து நாட்டில் 1920 ஆம் வருடம் வைகாசித் திங்கள் 18 ஆம் நாள் பிறந்தார். திருமுழுக்கின் போது 'கறோலி வொஸ்திலா'' எனப் பெயர் இடப்பட்ட இவர் விதைப்பவனும் உத்தம இடையனுமாகிய கிறீஸ்து தமது பாலிய உள்ளத்தில் விதைத்த ஞான விதைகளை உலகம் - பசாசு உடல் எனும் மூன்று சத்துருக்களாலும் அழிவுகாணஒட்டாமல் காத்து வளர்த்து வந்ததினால் 1947 ஆம் வருடம் தமது 27 ஆவது

( 4ஆம் பக்கம் பார்க்க)

மிருசுவிலூர் எட்வேட் ஜோர்ஜ்

### வெண்கொடி வேந்தனே வருக!

தந்தையே வருக! திருத் தந்தையே வருக!!
தரணியெலாம் சாந்தியெழ வந்தவரே வருக
மந்தைகளை தேடிவந்த நல் மேய்ப்பரே வருக
எந்தையே வருக! ஏற்றமிகு கொள்க.

வெள்ளைக்கொடி ஏந்தும் வேந்தனே வருக
வெண்மதி அகத்தோனே வெற்றியுடன் வருக
பிள்ளை மனத்தோராய் ஆயனிடை ஆடுகள்
பின் நடந்து வந்தோம் அடிதொழுதோம் நன்று.

பாதம் பதித்து மண்தொட்டு முத்தமிட்டு-ஆன்ம
பாசம் கொண்டிங்கு வந்தவரே
வேதம் உயர்வுபெற வேதனைகள் சிதைவுறவே
நேசர் எமையாள வேண்டுகின்றோம் எந்தையே.

-கவிதா ஜெயப்பிரகாசம்.

புனித பாப்பரசரின் வருகை
புதிய வாழ்வுக்கு அருள் தருவதாகுக
உங்களுக்குத் தேவையான சகல
பாவனைப் பொருள்களுக்கும்
எங்களிடம் வாருங்கள்
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சமாதானப் புறாவாக வரும்
திருத் தந்தையின் தீவ்விய ஆசி
அமைதியையும் அருளையும் எல்லோருக்கும்
பொழிவதாக!
சகல விதமான
மூக்குக் கண்ணாடிகளுக்கும்

★ எரிக் கணேஷ் ★
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புனிதரின் வருகையால்
புதுவாழ்வு மலர்க!
வைத்திய நிபுணர்கள் வழங்கும்
சிட்டைக்கு அமைய
சரியான கண்ணாடிகளை
வழங்குபவர்கள்
★
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

S·M·FERNANDO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பசன்கன்று விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 10/- மட்டும். தக்காளிக்கன்று 20சதம். ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ் (தனி)லிமிட்டெட், 14,சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி–187)

கடைச்சல் கருங்காலி பின்னல் செற்றி, கடைச்சல் கருங்காலி முதிரை கட்டில் (6x8) கடை சோக்கேஸ் அலுமாரி குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. [34770]

### இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தமாக்கியும் தரப்படும். தொடர்புகளுக்கு: மருதம் கோழிப் பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி. [சி-192]

### டயறிகள்

சிறிய பெரிய அளவுகளில் பூபாலசிங்கம் டயறிகள் வெளிவந்து விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. பூபாலசிங்கம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம். [சி–286]

### POLITICAL SCIENCE

G. C E. A/L and B. A. இலங்கையின் தேர்தல்கள், 94 பொதுதேர்தலும், சிறுபான்மை இனங்களும், இலங்கையின் அரசியல திட்ட வளர்ச்சி தெரிவு செய்யப்பட்ட நாடுகள், கட்சிமுறைகளும், உள்ளூராட்சி முறைகளும் வெளிநாட்டு கொள்கைகளும் இவ் ஐந்து புத்தகங்களின் ஆக்கம்: பீ. எம். புண்ணியாமீன் B. A. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-295)

### புலமைப் பரிசில் – 95

யாழ் Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/– மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். [8187]

### ரி. வி., டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள் ரி வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி–254]

### மணப்பெண் தேவை

கனடாவில் நிரந்தர வதிவிடமும் வேலையும் உடைய புனர்பூச நட்சத்திரமு், 31 வயது நிரம்பிய இந்து சமய, அழகிய மணமகனுக்கு அதே சமயத்தில் படித்த, அழகிய, 25–30 வயதிற்கு இடைப்பட்ட மணமகள் தேவை. கனடாவுக்கு போக விரும்பியோர் சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். இல. 25, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (34738)

## புதனன்று 62. 2 மி. மீற்றர் மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். குடாநாட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டும் 62. 2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியிருப்பதாக திருநெல்வேலியில் உள்ள விவசாய ஆராய்ச்சி பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-17)

**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

புதிய பிரிவு
**Spoken English**
ஆசிரியர்
M. A. ஹரி
B. A. Dip. In. Eng.
ஆரம்பம்:
**21 · 1 · 95**
சனி 12. 30
(விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்) (C-298)

---

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
**B. A. PART - I**
பேராதனைப் பல்கலைக்கழக
**B. A. வகுப்பு**

பொருளியல்
**S. வரதராஜன் B. A. (Hons.)**

ஆரம்பம்: **21 - 01 - 1995**
சனி 3–00p. m.

[சி–305]

---

## லங்கா சிமெந்து நிறுவன தொழிற்சங்கத்தின்

## விசேட பொதுக்கூட்டம்

இடம்: திருஞானசம்பந்தர் வித்தியாலயம் (சுன்னாகம்)

காலம்: 22 - 01 - 1995 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணி

சகல தொழிற்சங்க உறுப்பினர்களையும் தவறாது வருகை தரும்படி அழைக்கிறோம்.


க. சிவராஜா
தலைவர்.

செ. தேவரஞ்சன்
செயலாளர்.

(34 766)

---

## 2ஆம் ஆண்டு நினைவு



**அமரர் அகஸ்ரீன் பிரான்சிஸ்**
(புனித செபஸ்தியார் வீதி-பலாலி)

தோற்றம்: 13–02–1904
மறைவு: 21–01–1993

21-01-1995 சனிக்கிழமை நடைபெறவுள்ள நினைவு கூரலில் கலந்து எமது அன்பில் திளைத்தேகு றாறு உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பி. திருஞானசீலன்
(ஆசிரியர்)
(மகன்)

தபாற்கந்தோரடி,
கோப்பாய் தெற்கு.

(34775)

---

## 3ஆம் ஆண்டு நீங்கா நினைவுகள்

அன்னையின் மடியில்: 29 — 09 — 1929



ஆண்டவன் அடியில்: 23 — 01 — 1992

**திருமதி பரமேஸ்வரி இராசையா**
(சமாதான நீதிபதி திரு. இ. இராசையாவின் பாசம்மிகு பாரியார்)

திதி: 20–01–1995

மூவாண்டு ஓடிற்றம்மா சொர்க்கத்தில் நின் வாழ்வு
சொர்க்கத்தில் வாழாமல் சொந்த வீட்டிற்கே வந்திடம்மா
இல்லத்தில் உன் இடத்தை வெற்றிடமாய்க் காணுகிறோம்
நடமாடும் வீட்டினிலே நின்நிழல் படத்தைக் காணுகிறோம்
பாவிக்கும் பொருட்களிலோ நின் கைச்சுவட்டைக் காணுகிறோம்
பல்லாண்டு மறைந்தாலும் மறவோம் நின திருவுருவை
ஆண்டவனை வருத்தி உன் ஆத்மா சாந்தியடையவென
வேண்டி நின்று விழி மலர்கள் குளமாக வெதும்புகின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

(34773)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை
தெல்லிப்பளைப் பிரிவு

ஒத்திவைக்கப்பட்ட

## ஆண்டு பொதுக்கூட்டம் - 94

மேற்படி கூட்டம் 29-01-95 மு.ப. 9-30மணிக்கு யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறும். 1994ஆம் ஆண்டு அங்கத்தினரை இதில் பங்குபற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

— கௌரவ செயலாளர்.

ஆலை ஒழுங்கை,
மல்லாகம்.
17 01-95.

(சி–195)

---

சமுதாய முன்னேற்றக் கழகம்
நீர்வேலி

## கலை விழாவும் பரிசளிப்பு விழாவும்

பாலர் பகல் விடுதி — பாலர் பாடசாலை 40 ஆம் ஆண்டினையொட்டிய விழா 21 – 01 – 1995 சனிக்கிழமை நடைபெறவிருந்த இவ்விழாவானது மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. இவ்விழாவானது 28 — 01 — 1995 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

வே. சி. அப்புத்துரை,
தலைவர்.

[34774]

---

**CENTRE FOR PERFORMING ARTS**
திருமறைக் கலா மன்றம்

## புதிய மாணவரை சேர்த்தல்

1. **நாடகப் பயிலகம்**
   நாடகம் தொடர்பான அடிப்படைப் பயிற்சிகளை கொண்ட இப்பயிற்சி நெறி நாடகம் அரங்கியலை பாட நெறியாக கொண்டவர்க்கும் நாடகம் அரங்கியலில் பயிற்சி பெற விரும்புபவர்க்கும் பயனுள்ளது.
   (வயதெல்லை கிடையாது)

2. **சிறுவர் கலைக் கூடம்**
   சிறுவர்களின் ஆளுமையை வளர்த்தெடுக்கும் இப்பயிற்சி நெறியில் 12 வயதுக்குட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு தினம்:
**05 – 02 – 1995**

அதிபர்,
திருமறைக் கலா மன்றம்.

[சி–307]

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



07 . 12 . 1994 இல் ஜேர்மனியில் காலமான

அமரர்
**நல்லையா குமாரகுலசிங்கம்**
(மண்டைதீவு)

அன்னையின் மடியில்: 01 — 11 — 1957
அரன் கழலடியில்: 07 — 12 — 1994

கண்ணீர் விட்ட நாட்கள் எத்தனை - நினைக்
காணத் துடித்த நாட்கள் எத்தனை
ஐயிரண்டு ஆண்டுகள் ஆனதப்பா
அன்னிய தேசம் மீண்டும் வருவேனென்ற – நின்
வண்ணத் திருவுருவை பார்த்திருந்த நாட்கள் எத்தனை
வந்தது செய்தி வான அலைகளில்
வான் இடிந்து நம் தலைகளில் வீழ்ந்தது
வையகத்தில் நம் வாழ்வு வெறுத்தது
நெஞ்சு வெடித்து பொங்கி யெழுந்தகுருதி
நிறுத்த வரம்பின்றி கண்ணிரண்டிலும் பெருக்கெடுத்தத
ஏட்டினில் எழுதலாமோ நின் இழப்பை
பாட்டினில் எழுதிப் பார்க்கின்றோம் – உன்
விம்பம் தெரியுது உள்ளம் விம்மி வெதும்புது
கண்கெட்ட காலன் பாசம் அறுத்தெறிந்து
காணத்துடிக்கும் நம் வீட்டில் மீண்டும் – வாருமையா

உன் நினைவில் வாடும்:
– குடும்பத்தினர்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி,
வட்டாரம் – 6,
யாழ்ப்பாணம்.

[34776]

---

# காணி உச்சவரம்புச் சட்டம்: நீக்க உலகவங்கி வற்புறுத்து!

ஐம்பது ஏக்கருக்கு மேல் ஒருவர் காணியை சொந்தமாக வைத்திருக்க முடியாது என்ற சட்டுப்பாட்டை விதிக்கும் வகையில் 1972 இல் கொண்டுவரப்பட்ட நில உச்சவரம்புச்சட்டத்தை நீக்கும்படி உலக வங்கி அரசாங்கத்தை நெருக்கி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தனியார் நிறுவனங்கள் கட்டுப்பாடு எதுவுமின்றி தேவையான அளவு நிலத்தை சொந்தமாக வைத்திருக்க அனுமதிக்க வேண்டும் எனவும் உலகவங்கி வற்புறுத்தி உள்ளது. (உ)

## தமிழ்மக்களின்.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வயதில் ஒரு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பதினான்கு வருடகாலம் ஒரு சிறந்த பிரமாணிக்கமுள்ள குருவாகத் திருத்தொண்டாற்றி வந்தார்.

இவரது ஆழ்ந்த ஆன்மீக வாஞ்சையையும் மதிநுட்பத்தையும் நன்குணர்ந்த காலஞ்சென்ற திருத்தந்தை 23ஆம் அரு. இவரை ஒரு பேராயராக உயர்த்தியருளினார். பேராயராக நியமனம் பெற்ற பொழுது இவருக்கு வயது 43. சாதாரண கிறீஸ்தவன் என்ற நிலையிலிருந்து, தூய வெண்ணாடை அணிந்து, பலிநிறைவேற்றும் குருத்துவ நிலைக்கும், குருக்களையும் விசுவாசிகளையும் ஆண்டு நடத்தும், ஊதா நிற அங்கி தரித்து திருமுடி புனைந்து கரத்திற் செங்கோல் தாங்கும் பேராயர் வரை உயர்ந்த இவ் உத்தம தலைவனை இறைபதமெய்திய திருத்தந்தை 6 ஆவது சின்னப்பர், திருச்சபையின் இராசகுமாரன் (Prince of the Church) பிறின்ஸ் ஒவ்த சேர்ச் ,என்ற கருதினால் அந்தஸ்துக்கு ஏற்றி வைத்தார். 6ஆவது சின்னப்ப பாப்பரசர் 1978ஆம் ஆண்டு தேக வியோகமான தின் பின் இராயப்பர் சிம்மாசனமேறிய பரிசுத்த பிதா 1ஆம் அருளப்பர் சின்னப்பர் தமது 33நாள் குறுகிய ஆட்சிக் காலத்தின்பின்மாரடைப்பால் காலமானார்.

தொடர்ந்து நடைபெற்ற கிஸ்ரயின் பேராலய திருத்தந்தையார் தேர்தலில் அங்கு கூடியிருந்த 111 கருதினால்மார் கூட்டத்திலிருந்து தெய்வீக திருவுள்ளம் கருதினால் கறோலி வொஸ்திலா வை இராயப்பர் ஸ்தானாதிபதி ஆக்கியது. 1978ஆம் வருடம் ஐப்பசித் திங்கள் 22ஆம் நாள் 2ஆவது அருளப்பர் சின்னப்பர் என நாமகரணம் சூடி சிரமுடி புனைந்து இராயப்பர் சிம்மாசனத்தமர்ந்தார்.

கத்தோலிக்க திருமறை ஐக்கியத்தின் மையமாக திருத்தந்தை விளங்குகின்றார். எனவே இந்தப் பிரதான மேய்ப்பரோடு ஐக்கியப்பட்டு, அப்போஸ்தொலிக்கு ஸ்தானம் போதிக்கும் எல்லாப் பிரமாணங்களையும் ஏற்று, அவரால் அனுப்பப்படும் ஆயர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது கத்தோலிக்கர் அனைவரினதும் கடமையாகும். அவர் சகல கிறிஸ்தவர்களையும் கடமைப்படுத்தும் பிரமாணங்களை ஏற்படுத்தவும் கற்பனைகளைச் செய்யவும் அதிகாரமுடையவர்.

இம்மாதம் 20ஆம் நாள் இலங்கை மண்ணில் காலடி பதிக்கப்போகும் புனித பாப்பிறையின் வருகை என்றுமே மனதை விட்டகலாத ஒரு மாபெரும் நிகழ்வாக—இலங்கை வரலாற்று ஏடுகளில் பொன்னட்சரங்களால் பொறிக்கப்படவேண்டிய அதி உன்னத நிகழ்வாக விளங்கப் போகின்றது.

கடந்த பல வருடங்களாக இந்த அழகிய சின்னஞ்சிறு தீவில் நடைபெற்றுவரும் இனவன்முறைகளால் — அரசியற்படுகொலைகள் பேரழிவுகளால் மக்கள் மனம் புண்பட்டு, சமாதானத்துக்காக ஏங்கித் தவிக்கும் இவ்வேளையில்—சண்டையை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்டவர்கள் காலடி எடுத்துவைத்திருக்கும் இத்தருணத்தில்— திருத்தந்தையின் வரவு நல்லதொரு நம்பிக்கை நட்சத்திரமாக மிளிர்கின்றது.

எங்கு வாழ்ந்தாலும் இனத்தாலும் மொழியாலும் உயர்ந்த கலாசார அம்சங்களாலும் ஒன்றுபட்டு வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்கு பரிசுத்த பிதாவின் தூய அன்பும் பிதாந்துவமும் மேலும் ஒருபடி நம்பிக்கை ஊட்டுவனவாகவே அமைந்துள்ளன.

ஒரு அன்புத் தந்தை என்ற நிலையிலிருந்து தமிழ் மக்களின் அவலநிலையை புனித பாப்பரசர் உணர்வதும் அதனையிட்டு அனுதாபப் படுவதுங் கூட தெளிவாக்கப் பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களின் நிலையை – அவர்களது பிரச்சினையின் தன்மையை — திருத் தந்தை நன்கு புரிந்துள்ளார். அதனாலேயே இலங்கைக்காக இறைவனை மன்றாடுங்கள் என்று அகில உலக மக்களையும் பரிவன்புடன் கேட்டுக் கொள்கின்றார். இலங்கையில் அன்பும் சமாதானமும் நிலவும்படி பிரார்த்தனை செய்யுமாறு உலகின் அனைத்து ஆயர்களுக்கும் அன்பு ஆணை பிறப்பித்து, அவ்வாறே பிரார்த்தனை செய்யுமாறு இலங்கை ஆயர்களுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்று எமது நாட்டின் எத்திசையிலும் சமாதானப் பேச்சுக்கள் எதிரொலிக்கின்றன. சமாதான ஊர்வலங்கள் நடைபெறுகின்றன. இரவு விடிவதற்கான நற்சகுனங்கள் தென்படுகின்றன. எமது மக்கள் நீண்ட இருளிலிருந்து விடிவெள்ளிக்கும் வெண்நிலவுக்கும் காத்திருக்கின்றனர். இடம்பெயர்ந்து அகதிகளானோர் வீடு திரும்பும் நாளை எதிர்பார்த்துள்ளனர். அடிமைகளாயுள்ளோர் 'சுதந்திரம்' எனும் தென்றலைச் சுவைக்க 'தமிழீழம்' எனும் தங்கள் தாய்த் திருநாட்டைக் காண வாஞ்சையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

நாடு தேடி வரும் நல்லாயனைத் தரிசிக்கும் நாளைக் காண வழிமேல் விழிவைத்துக் காத்துக்கிடக்கின்றனர். அங்ஙனம் நேரில் தரிசிக்க வாய்ப்புப் பெறாதோர், தங்கள் ஆன்மீகத் தலைவர் பால் தாம் கொண்டிருக்கும் நற்சிந்தனைகளை தமது உள்ளங்களில் இருத்தி அவரை அன்பு செய்கின்றனர்.

எமது மக்கள் மத்தியில் அலை அலையாக எழும்பும் அவலக்குரல்களும், அங்கலாய்ப்புக்களும் தாகங்களும் தவிப்புகளுமடங்க, சமாதான தூதுவனாக அமைதியின் வெண்புறாவாக எம்மை நாடி புனித பாப்பரசரின் புனித கமல மலர்ப்பாதங்கள் இரத்தக்கறை படிந்துள்ள எமது மண்ணிற் தோய்ந்து அதனைப் புனிதப்படுத்துவதாக மறமொழிந்து அறம் ஓங்குவதாக! ★

## யோசேவ் வாஸ்.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசுவாசத்தைக் காக்க உறுதி நிலையை மேற்கொண்டமையால் இப்பெயர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அங்கிருந்து யோசேவ் வாஸ் அடிகள் இரகசியமாக யாழ்ப்பாணப் பட்டணத்திலும் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலும் வாழும் மக்களைச் சந்தித்தார். தமது விசுவாசத்தில் உறுதியாயிருந்த கத்தோலிக்கரைத் திடப்படுத்தியதுமல்லாது, கத்தோலிக்க சமயத்தை விட்டு விலகிச் சென்றோரையும், பிரிவினைச் சகோதரர்களையும், இந்துக்களையும் மனம் திருப்பினார்.

யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்கசமயம் மீண்டும் தழைத்தோங்கத் தொடங்கியது, விசுவாசிகளின் இல்லங்களில் ஒவ்வொரு இரவும் பாட்டுக்களினதும், செபங்களினதும் ஒலிமுழங்கத் தொடங்கியது. ★

(நன்றி: பாதுகாவலன்)

---

# WANTED

Part time Tamil - English Translator Wanted. Retired Officials Preferred. Apply with Bio Data

**Before 31 – 01 – 1995 to:**

District Coordinator
**SAVE THE CHILDREN**
"Karuvemban Valavu",
Raja Veethy, Thirunelvelly.

[34778]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பாப்பரசர் விஜயம்

உலகடங்கிலும் வாழும் 90 கோடி கத்தோலிக்க மக்களின் மெய்மறைத் தலைவரான திருத்தந்தை பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இன்று இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

உலகெங்கிலும் சமாதானமும், அமைதியும் நிலவ வேண்டும்; சகோதரத்துவமும், சகவாழ்வும் நிலவ வேண்டும்; அன்பும் அருளும் ஓங்க வேண்டும் என்ற உன்னத இலக்குடன் இறைபணி புரியும் பாப்பரசரின் இன்றைய விஜயம் வரலாற்றுப் புகழ் மிக்கதாகக் கருதப்படுகிறது.

பாப்பரசரின் தரிசனத்தைப் பெற்று இறை ஆசீர் பெறுவது, தங்கள் வாழ்நாளில் கிடைத்தற்கரிய பேறாகக் கத்தோலிக்க மக்கள் கருதுகிறார்கள். அந்த வகையில் அவர்களுக்கு இன்றும், நாளையும் சிறப்புக்குரிய நாள்களாகும்.

வடக்கில் உள்ள கத்தோலிக்க மக்கள் எல்லோராலும் தமது திருத்தந்தையை தரிசித்து மறைவாழ்வில் புத்தூக்கமும், அருளும் பெற முடியவில்லை. அவர்கள் சோதனைகள், தடங்கல்கள் இன்றி கொழும்பு செல்வதற்கான, நிம்மதியான பயணம் செய்யக்கூடிய போக்குவரத்துப் பாதை ஒன்றில்லை என்பதனால்.

பாப்பரசரின் விஜயத்துக்கு முன்னதாக யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கான பாதை ஒன்றைத் திறப்பதில் அரசாங்கத்துக்கு அக்கறை உள்ளதாகப் பேசப்பட்டது. ஆனால் எதிர்பார்த்தவாறு அப்படி எதுவும் நிகழவில்லை.

பாப்பரசரின் இலங்கை விஜயத்தின் பிரதான நோக்கம் ஆசாரத்துக்குரிய யோசேவ் வாஸ் அடிகளை முத்திப்பேறு பெற்றவர் என்ற நிலைக்கு உயர்த்தும் நிகழ்வை நடத்துவதேயாகும்.

யோசேவ் வாஸ் அடிகள் முதன் முதலில் யாழ்ப்பாணத்திலேயே தனது இறைபணியை ஆரம்பித்தவர். அவருக்கு முத்திப்பேறு அளிக்கும் திருநிகழ்வை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருக்கக் கூடாதா என்ற ஆதங்கம் யாழ். கத்தோலிக்க மக்களில் ஒரு சிலருக்கு ஏற்பட்டதையும் மறைப்பதற்கில்லை.

யாழ்ப்பாண கத்தோலிக்க மக்கள் பாப்பரசரைத் தரிசிப்பதற்காக கொழும்பு செல்வதற்கு அரசாங்கம் பாதை ஒன்றை திறக்காததனை ஆட்சேபித்து, அவர்களில் எவரும் அங்கு செல்லாமல் பகிஷ்கரித்தால் அது தவறாக மாட்டாது என்ற கருத்தும், வெறுப்பும் நிலவுவதும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்

எனினும் —

தமது ஆன்மீகத் தலைவரை நேரில் தரிசிக்க முடியாவிடினும், அவர் பால் கொண்டிருக்கும் நற்சிந்தனைகளை தமது உள்ளங்களில் இருத்தி அன்பு செய்யும் கத்தோலிக்கப் பெருமக்களே அனேகர்.

மேலும் பாப்பரசரின் வருகையினால், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற முத்திப்பேறு பட்டம் அளிக்கும் நிகழ்வினால், கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி, நாடு முழுவதும் மதிப்பில் உயர்கிறது; இறைபற்றில் உறுதி பெறுகிறது என்ற நிலையும் உண்டு.

சமுதாயத்தில் சிறுபான்மையினராக ஒடுக்கப்பட்டவர்கள், அடக்கு முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமைகள் மறுக்கப்பட்டவர்களின் குரலாக ஒலிப்பவர் பாப்பரசர். ஆகையால் அவரது வருகை தமிழ்மக்களைச் சிறுபான்மையினராகக் கருதி, அவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்க மறுக்கும் அல்லது பின்னடிக்கும் தென்னிலங்கை தலைவர்களுக்கு புத்தி புகட்டுவதாக அமைய வேண்டும்

இந்நாட்டின் நீண்டகாலப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படவேண்டும் என்ற தமது விருப்பத்தை பாப்பரசர் வெளியிடக்கூடும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு பாப்பரசர் தமது விருப்பத்தை வெளியிடும் பட்சத்தில், அது நிறைவேற்றப்படுமா என்பதற்கு ஆக்கபூர்வமான பதிலை செயலில் காட்டுவதே பண்பு.

பாப்பரசரின் விஜயத்தின் மூலமேனும் இந்தப் பண்பு தென்னிலங்கையில் மலருமா என்பதற்குக் காலம் தான் பதில் சொல்லும்!

---

# பாப்பரசரின் உயிருக்கு உள்நாட்டில் அச்சுறுத்தல் இல்லை என்கிறது அரசு!

## எனினும் வெளிநாட்டு தீவிரவாதிகள் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 20

இன்று இலங்கைக்கு விஜயம் செய்யும் பாப்பரசரின் உயிருக்கு உள்நாட்டிலிருந்து அச்சுறுத்தல் ஏதும் இல்லை. ஆனால் வெளிநாடுகளில் உள்ள தீவிரவாத இயக்கங்களினால் இலங்கையில் வைத்து அவர் மீது குறி வைக்கப்படலாம்.

சிரேஷ்ட பாதுகாப்பு மற்றும் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த தீவிரவாத அமைப்புகள் உட்பட பல்வேறு சர்வதேச இயக்கங்கள் பாப்பரசரின் உயிருக்கு குறி வைக்கக்கூடும் என்ற சந்தேகத்தை நிராகரிக்க முடியாதிருப்பதாக அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

இதன் காரணமாக இத்தகைய நோக்கத்துடன் சர்வதேச தீவிரவாத இயக்கங்களின் பிரதிநிதிகள் எவரும் நாட்டுக்குள் புகுந்திருக்கின்றார்களா என்பதை கண்டுபிடிக்கும் முயற்சியில் குற்றப் புலனாய்வுப் பிரிவும், அதனுடன் இணைந்த ஏனைய பொலீஸ் குழுக்களும் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன.

கடந்த ஒரு மாத காலத்துக்குள் இத்தகைய நபர்கள் எவரும் இலங்கைக்குள் வந்தார்களா என்பதை அறிவதற்காக ஹோட்டல்களில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் விசாரிக்கப்படுகின்றனர்; ஹோட்டல்களில் தேடுதலும் இடம்பெற்று வருகின்றது.

பாப்பரசர் பகிரங்க ஆராதனை நடத்தும் காலிமுகத்திடலிலும் தீவிர பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன; சூழலில் உள்ள சகல கட்டடங்களிலும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தப்படுகின்றது.

குறிபார்த்துச் சுடுவதில் நிபுணர்களாக இருப்போர் பயன்படுத்தலாம் எனச் சந்தேகிக்கப்படும் — காலிமுகத்திடலின்சுற்றாடலில் உள்ள — கட்டடங்களை பாதுகாப்புப் படையினர் நேரடியாகப் பொறுப்பேற்று தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

காலிமுகத்திடலுக்கு வரும் பாப்பரசரை யாரும் நெருங்க முடியாதபடி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் —

அங்கு வரும் குருவானவர்கள், சங்கைக்குரிய சகோதரிகள் உட்பட அனைவருமே உடற்பரிசோதனைக்கும் கூட உட்படுத்தப்படுவர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (உ)

---

### திருப்பி ஒப்படைக்காத அரசியல்வாதிகளிடமிருந்து

# திடீர் நடவடிக்கையின் மூலம் ஆயுதங்களை கைப்பற்றத் திட்டம்!

கொழும்பு, ஜன. 20

ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் தமது பாதுகாப்புக்கென ஆயுதங்களைப் பெற்றுக்கொண்ட சுமார் 2ஆயிரத்து 500 அரசியல் வாதிகள் மற்றும் பிரமுகர்கள் அவற்றை இதுவரை திருப்பி ஒப்படைக்காததை அடுத்து —

திடீர் நடவடிக்கை ஒன்றின் மூலம் அவர்களிடம் இருந்து அவற்றைக் கைப்பற்றும் திட்டம் குறித்து பொலீஸார் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் — சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருந்த அரசியல் வாதிகள் அல்லாத 136 பேரை கொழும்பில் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து 143 கைத்துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு நடந்த நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போது இடம்பெற்றவன் செயல்களில் பொ. ஐ. முன்னணி மற்றும் ஐ.தே.க ஆதரவாளர்கள் 40 பேர் கொல்லப்பட்டிருந்தனர். (ஐ)

# பூநகரிப் படை முகாமுக்கு ஜெரி டி சில்வா விஜயம்!

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி. சில்வா கடந்த வாரம் பூநகரி இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தார்.

அங்குள்ள சிப்பாய்கள் மத்தியில் உரையாற்றிய இராணுவத் தளபதி, தற்போது இடம்பெற்று வரும் சமாதானப் பேச்சுக்கள் மற்றும் விவரங்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

---

# பாதுகாப்பு நெருக்கடிக்கு மத்தியில் பாப்பரசரின் புனிதப் பயணங்கள்

பாடசாலை நாள்களில் மேடை நாடகங்களில் தோன்றி ரசிகர்களின் கவனத்தை கவர்ந்த கரோல் வொஜ்டிலா என்ற அந்த இளைஞன் உலகின் நூறு கோடி கத்தோலிக்க மக்களின் தன்னிகரில்லா தலைவனாக வருவான் என்பதை அன்று யாருமே கற்பனைபண்ணிக் கூடப் பார்த்திருக்கமாட்டார்கள்.

1920ஆம்ஆண்டுபோலந்தில் உள்ள வடோவைஸ் என்ற இடத்தில் பிறந்த கரோல் வொஜ்டிலா தனது 9ஆவது வயதில் தாயாரையும், 21ஆவது வயதில் தந்தையையும் இழந்தார்.

பின்னர் நடந்த ஓர் விபத்துச் சம்பவத்தில் தன் அன்புக்குரிய ஒரே சகோதரரான டாக்டரையும் பறிகொடுத்தார் வொஜ்டிலா.

சிறுவயதிலேயே தனிமைப்பட்டுப்போன அவர் தான் சந்தித்த இழப்புக்களின் துயரத்தில் வாடினார்.

அந்தக் காலத்தில் ஐரோப்பிய பிராந்தியத்தில் இடம்பெற்றுவந்த உள்நாட்டு யுத்தங்களும் இன மோதல்களும் வொஜ்டிலாவின் மனதில் வடுக்களை ஏற்படுத்தின.

பாஸிஸ, நாஸிஸ கோட்பாடுகளின் விளைவுகளை மொத்தமாக அனுபவிக்கும் நிலை அவருக்கும் ஏற்பட்டது.

### மனத்துயரங்கள்

சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் ஏற்பட்ட மனத்துயரங்கள் வொஜ்டிலாவை பிரார்த்தனைகள் மூலம் மனச்சாந்தி பெறும் நிலைக்கு இட்டுச் சென்றன.

துயரங்களை சகித்துக் கொள்ள இறை நம்பிக்கையை தன் வழியாக்கிக் கொண்டார்.

உலகளாவிய அமைதி, மனித குல மேம்பாடு பற்றிய சிந்தனைகள் கரோல் வொஜ்டிலாவின் எண்ணத்தில் வளரத் தொடங்கின.

1946 இல் தன்னை ஒரு மத போதகராக மாற்றிக் கொண்ட இளைஞர் வொஜ்டிலா போலந்தின் பேராயராகவும் பின்னர் கத்தோலிக்க கர்தினால் ஆகவும் உருவாகினார்.

1978 இல் அவர் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பராக தெரிவு செய்யப்பட்ட போது உலக கத்தோலிக்க மக்கள் அவரின் வருகையை சமாதானத்தின் வரவாக எண்ணினர். அவரது புகழும், பெருமையும் ஓங்கின.

### முடி சூடா மன்னன்

பாப்பரசரை போலந்து மக்கள் தங்கள் முடி சூடா மன்னராகவே மதிக்கின்றனர். அங்கு அவர் பிறந்த இடம் புனித பிரதேசமாகப் பேணப்பட்டு வருகிறது.

பாப்பரசரின் உத்தியோக பூர்வ வாஸஸ் தலம் வத்திக்கான் அரண்மனையில் உள்ளது. அங்குள்ள ஓர் சிறிய அறையில் சிக்கனமாகவே தனது வாழ்க்கையை நடத்துகிறார் பாப்பரசர்.

நத்தார் மற்றும் ஈஸ்டர் பண்டிகை திருநாள்களின் போது வத்திக்கானில் பாப்பரசர் மக்களுக்கு பல மொழிகளில் வாழ்த்துக் கூறுவார். அவ்வேளையில் பாப்பரசரை தரிசிப்பதற்காக பல்லாயிரக் கணக்கில் மக்கள் காத்திருப்பார்கள்.

உலக கத்தோலிக்க மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த பாப்பரசருக்கு எதிர்ப்புக்களும் இருக்கவே செய்தன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வத்திக்கானில் துருக்கிய இளைஞன் ஒருவன் பாப்பரசரை நோக்கி துப்பாக்கியால் சுட்ட சம்பவத்தின் பின் அவரின் பாதுகாப்பு குறித்த அச்சம் அதிகரித்தது.

இஸ்லாமியமத அடிப்படை வாதிகளால் பாப்பரசரின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக அவரது பாதுகாவலர்கள் கருதுகின்றனர்.

ஆயினும் பாப்பரசரின் விஜயங்கள் இடம் பெறும் சந்தர்ப்பங்களில் இது குறித்து வெளியிடப்படும் எச்சரிக்கைகள் மிகைப்படுத்தப்பட்டவையே என்றும் சிலர் கருதுகின்றனர்.

பாப்பரசரின் பாதுகாப்பு என்பது சிக்கலான ஒரு விடயமாகவே மாறிவருகிறது.

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தற்போது மேற்கொண்டுள்ள விஜயம் அவரது காலத்தில் இடம் பெறும் நீண்ட பயணம் என்று கூறப்படுகிறது.

பிலிப்பீன்ஸ், பப்புவா நியுகினி மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்டு அவர் இன்று கொழும்பு வருகிறார்.

பாப்பரசரின் விஜயங்கள் இடம்பெறும் நாடுகளின் ஆட்சியாளர்கள் அது குறித்து பெருமையும், புகழும் அடைந்தாலும்—

கொழும்பு போன்ற நகரங்களில் பாப்பரசருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதில் பெரும் நெருக்கடிகள் எழுகின்றன.

பாப்பரசர் தற்போது விஜயம் மேற்கொண்டுள்ள நாடுகள் — ஆஸ்திரேலியா தவிர — ஏதோ ஒரு வகையில் உள்நாட்டு நெருக்கடியில் சிக்கியுள்ளன.

### பாதுகாப்பு நெருக்கடி

பிலிப்பீன்ஸின் மணிலா பப்புவாநியுகினியின் போட் மொரஸ்பி ஆகிய நகரங்களில் கடந்த சில வாரங்களாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதுகாப்பு நெருக்கடிகளுக்குள் சிக்கியிருந்தது.

ஒருபுறம் பாப்பரசரின் தரிசனம் காண முண்டியடித்த யாத்திரியர்களை கட்டுப்படுத்த முடியாமலும்—

மறுபுறம்—

பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒழுங்கைப் பேணுவதிலும் பொலீஸாரும் பாதுகாப்பு அணியினரும் திண்டாடிப் போனார்கள்.

உலக அரசியல் தலைவர் ஒருவருக்கு இதுவரை வழங்

### நல்லூர் தாஸ்

கப்படாத பாதுகாப்பு இன்றும் நாளையும் கொழும்பில் பரிசுத்த பாப்பரசருக்கு வழங்கப்பட இருப்பதாக பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்திருக்கிறார்

மின் விளக்குகளாலும் அலங்கார வளைவுகளாலும் விழாக் கோலம் பூண்டுள்ள கொழும்பு மாநகரில் திரும்பிய திசை எங்கும் பொலீஸார் காணப்படுகின்றனர். பொலீஸாருக்கு உதவுவதற்காக இராணுவத்தினரும் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்

இன்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கும் பரிசுத்த பாப்பரசரும் அவரது குழுவினரும் [illegible] இங்கு தங்கியிருப்பர்.

விமானத்தில் இருந்து இறங்கியவுடன்— சரியாக 3 மணி ஐந்து நிமிடத்துக்கு— பாப்பரசர் இலங்கை மண்ணை முத்தமிடுவார்.

தாம் செல்லும் நாடுகளில் போய் இறங்கியதும் முதலில் அந்த நாட்டு மண்ணை முத்தமிடும் வழக்கம் பாப்பரசருக்கே உரிய உன்னதமான தனிப்பண்பாகும்.

கொழும்பில் பாப்பரசர் கலந்துகொள்ளும்— மிகப் பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் கூடிய— சமய ஆராதனை நாளை காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது.

அந்த நிகழ்வில் கலந்துகொள்ளச்செல்லும் அனைவரும் உடல் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். மதகுருமார்களும் அருட் தந்தையர்களும் கூட இதில் விதிவிலக்கு அல்ல.

பாப்பரசரின் விஜயம் இடம்பெறும் சமயத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றெல்லாம் கொழும்பு வாழ் மக்களுக்கு பொலீஸார் அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளனர்.

இதற்கிடையில்—

பாப்பரசரின் இலங்கை விஜயத்துக்கு தென்பகுதி பௌத்த மத தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பௌத்த மதத்தின் மேன்மையை கொச்சைப்படுத்தும் வகையில் தனது நூல் ஒன்றில் பாப்பரசர் கருத்து வெளியிட்டிருப்பதாக பௌத்த மத தலைவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

அதற்காக பௌத்த மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தி வருகின்றனர்

ஒரு புறம் பாதுகாப்பு நெருக்கடிகள் மறுபுறம் பௌத்த மத உணர்வலைகள் இவற்றிற்கு மத்தியில் அரசு பாப்பரசரை முழு அரச மரியாதையுடன் இன்று வரவேற்கவுள்ளது.

பாப்பரசரின் வெளிநாட்டு விஜயங்கள்; உலக அளவில் பெரும் பாதுகாப்பு நெருக்கடிகளை ஏற்படுத்தினாலும் அவற்றின் மத்தியிலும் பாப்பரசரின் குரல் மௌனப் பெரும்பான்மையினரின் — சமாதான விருப்பத்தின் — தனிமைக் குரலாகவே ஒலிக்கிறது. ★

---

### அரசாங்க ஆஸ்பத்திரிகளில்

# 14 ஜெனரேற்றர்களை இயக்குவதற்கு டீசல் இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் இருக்கும் 14 ஜெனரேற்றர்கள் எரிபொருள் இன்மையால் இயங்காமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட பிராந்திய சுகாதார திணைக்களம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் இந்த ஜெனரேற்றர்களை தருவித்து அரசினர் வைத்தியசாலைகளுக்கு வழங்கியுள்ளது.

இந்த ஜெனரேற்றர்கள் டீசலில் இயங்குபவை.

இந்த ஜெனரேட்டர்களை இயக்குவதற்கு கொழும்பில் இருந்து டீஸல் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்படாததாலேயே அவை இயங்க முடியாது முடங்கிக் கிடக்கின்றன. (ஐ-17)

---

### பூகொட டெக்ஸ்ரைல்ஸ்

# அலுவலகத்தினுள் புகுந்து தொழிலாளர் தாக்குதல்!

## முகாமையாளர்கள் நையப்புடைப்பு

கொழும்பு, ஜன. 20

பூகொட டெக்ஸ்ரைல்ஸ் நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர் ஒருவரை நிர்வாகத்தினர் வேலையிலிருந்து இடைநிறுத்தியதை அடுத்து—

கூட்டமாக அலுவலகத்துக்குள் புகுந்த தொழிலாளர் கோஷ்டி ஒன்று, நிறுவனத்தின் ஆளணி முகாமையாளரையும், பாதுகாப்பு முகாமையாளரையும் நையப்புடைத்து காயப்படுத்தியதுடன், நிறுவனத்தின் சொத்துக்களையும் வாகனங்களையும் நாசப்படுத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்திய வர்த்தக நிறுவனத்துக்கு உட்பட்ட பூகொட டெக்ஸ்ரைல்ஸ் லங்கா லிமிட்டெட்டில் கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது.

கோபத்துடன் சென்ற தொழிலாளர் கூட்டம், படுகாயமுற்ற இரு அதிகாரிகளையும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதையும் தடுத்தது என்றும்—

பின்னர் பொலீஸார் வந்து நிலைமையைக் கட்டுப்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவம் குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை (ஐ-2)

---

### உணவுப் பொருள் கொள்வனவுக்காக

# ப. நோ. கூ. சங்கங்களுக்கு மக்கள் வங்கி கடன்உதவி

யாழ்ப்பாணம், ஜன. 20

அத்தியாவசிய உணவுப் பொருள்களை கப்பல் மூலம் யாழ். மாவட்டத்திற்கு கொள்வனவு செய்வதற்கென 5 கோடி ரூபாவை யாழ். மாவட்டத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடனாக வழங்குவதற்கு மக்கள் வங்கி முன்வந்துள்ளது.

மக்கள் வங்கிக்கும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடையிலுள்ள பணக்கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டமொன்று கடந்த திங்கட்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் திரு. ஆர். அருளானந்தம் கடன் உதவி குறித்த தகவலை தெரிவித்தார். (க-4)

# போதைபொருள் வர்த்தகர் கைது

கொழும்பு, ஜன. 20

கொழும்புக்கு போதைப் பொருள்களை விநியோகித்து வந்ததாகக் கூறப்படும் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

சுமார் 150 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் அவரது வீட்டு கூரைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (க-ஐ-6)

# ஆங்கில கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 20

வலயம் ஒன்றில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோருக்கான ஒருநாள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும். (இ)

---

# தேர்தல் பிரிவுகள் தோறும் மாடிவீட்டு தொகுதிகள்

## விரைவில் அமைக்கத் திட்டம்

நாட்டின் ஒவ்வொரு தேர்தல் பிரிவிலும் 100பகுதிகளைக் கொண்ட மாடி வீட்டுத் தொகுதிகளை அமைக்க வீடமைப்பு, நிர்மாணத்துறை பொதுவசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா திட்டமிட்டுள்ளார் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதேச அதிகார சபைகளுடனும் அரசியல் தலைவர்களுடனும் கலந்தாலோசித்து சரியான தலங்களைக் கண்டுபிடிக்குமாறு அமைச்சர் ஏற்கனவே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் போன்ற நடுத்தர வருமானம் உடையவர்களின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவே இம்மாடி வீட்டுத் தொகுதிகள் அமைக்கப்பட இருக்கின்றன. (க)

---

# மனக்கவலை மாற்ற....

மனிதப்பிறவி எடுத்தோர் அனைவரும் கவலையின்றி வாழ விரும்புகின்றனர். கவலையின்றி வாழ்வதற்கென்று சரியான நெறி இருக்கின்றது அந்த நெறியில் இருந்து நீங்காமல் வாழ்ந்தால் கவலையற்று வாழலாம். நெறி பிறழ்ந்தால் கவலையே வந்தெய்தும்.

கவலையின்றி வாழ நெறி கூறும் திருவள்ளுவர் தனக்கு நிகர் இல்லாத இறைவனுடைய திருவடிகளை இடைவிடாது நினைத்தோரால் மட்டுமே மனக்கவலையை மாற்ற முடியும் என்று கூறுகிறார்.

தனக்குவமை யில்லாதான்
தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது

என்பது திருக்குறள்

முன் செய்த தீவினைக்கு ஏற்பவே மனிதன் துன்பம் அடைகிறான். எனவே கவலையை மாற்ற மனிதன் முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சி இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டு என்கிறார் திருஞானசம்பந்தர்.

அவர் மக்களைப் பார்த்து 'மானிடரே முன் செய்த வினைக்கு ஏற்றவாறே இப்போது அனுபவிக்கப்படுவினை என்று பெரியோர் சொல்லும் வார்த்தைகளை நீங்கள் அறிவீர்! அவ்வினைத் தொடர்பினின்றும் தப்பும் வகையை நாடாமல் இருப்பது உமக்குக் குறைவு அன்றோ?

அடியவராகிய நாங்கள் கையால் இயன்ற திருத்தொண்டு செய்து எம்பெருமான் திருவடிகளைத் துதித்து வணங்குவோம். ஆதலால் முன் செய்த பாவங்கள் வந்து எங்களைத் தொடரப்பெறா. இதற்குப் பெருமானது திருநீலகண்டத்தின் மீது ஆணை' என்று கூறுகின்றார்.

வினையை வெல்லும் முயற்சியில், மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் ஈடுபட வேண்டும்.

இறைவனை நினைத்தலும் அவனுடைய திருநாமங்களை உச்சரித்தலும், அவன் நெறி நிற்றலும் செய்வோர் கவலையை வெல்வர்

நாம் எப்போதும் இறைவனை நினைத்தல் ஆகிய இன்பத்தையும், அவனுடைய திருநாமங்களை உச்சரித்தல் ஆகிய இன்பத்தையும் இறைவனுக்குத் திருத்தொண்டு செய்தலாகிய இன்பத்தையும் எய்தவேண்டும்

**ஞானக்கதிர்**

செல்வி பா. பாரதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெற்பயிர்கள் வெள்ளத்தால் முற்றாக அழியும் ஆபத்து

## விவசாயத் திணைக்களம் அச்சம்

யாழ்ப்பாணம், ஜன. 20
கடந்த 3 தினங்களாக யாழ் மாவட்டத்தில் பெய்துவரும் பெரு மழையினால் அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ள நெற்காணிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் மழை பெய்தால் நெற்பயிர்கள் வெள்ளத்தில் முழுதாக அழியும் நிலைமை தோன்றலாம் என மாவட்ட விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

வலி மேற்கு, வலி தென் மேற்கு, வலி தெற்கு ஆகிய பகுதிகளில் வெள்ளம் போட்டு நெல் வயல்களில் முற்றிய நெற்பயிர்கள் நிலத்தில் விழுந்து கிடப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

மிளகாய், வெங்காய தோட்டச் செய்கையும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் ஜனவரி மாதத்தில் மட்டும் நேற்று வரை 168.4 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை நேற்றுக் காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் 65.2 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(க-4-17-28-135)

### சர்வோதய ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஜன. 20
கைலை சர்வோதய ஆதீனத்தின் ஆரம்ப அறிமுக விழா 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.45 மணி முதல் யாழ்ப்பாணம் நீராவியடி சைவ பரிபாலன சபை ஆறுமுகநாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பேராசிரியர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும். (க)

### மீளாய்வு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 20
யாழ். பிராந்திய பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் சென்றவருடம் மேற்கொள்ளப்பட்ட சுகாதார வேலைத் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறும். (க-4)

### ஆரம்பவிழா

மகளிர் அபிவிருத்தி நிலையம் பொறுப்பேற்று நடத்தவிருக்கும் கோண்டாவில் வடக்கில் உள்ள மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தில் இயங்கிவந்த பாலர் முன்கல்வி நிலையத்தின் ஆரம்ப விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் மேற்படி சங்கத்தில் நடைபெறும். (க)

# வடமாகாணத்துக்கான அபிவிருத்தித் திட்டம்

## நிபுணத்துவகுழு இன்று வரும்

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வடமாகாணத்துக்கான புனரமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்காக கலாநிதி ஏ. எஸ். குணசிங்கம் தலைமையிலான நிபுணத்துவகுழு இன்று வெள்ளிக்கிழமை கிளாலி ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேரும் என தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவினருடனான ஆலோசனைக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சகல பிரதேச செயலர்களையும், திணைக்கள, கூட்டுத்தாபன தலைமை அதிகாரிகளையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார். (இ-4)

# திருவிழாவில் கைகலப்பு; மூவர் காயம், சிலர் கைது

சண்டிலிப்பாய், ஜன 20
பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் திருவிழாவில் கைகலப்பில் ஈடுபட்டு குழப்பம் செய்ததாகக் கருதப்படும் சிலரை சங்கானை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

குறிப்பிட்ட ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தீ மிதிப்பு விழா நடைபெற்றது. தீமிதிப்பு வைபவத்தைப் பார்ப்பதற்காக அயல் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் சென்றிருந்தனர்.

இரவு சுமார் எட்டு மணியளவில் அடியார்கள் மூவர் தீ மிதிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை —

அங்கு கூடியிருந்த இரண்டு கோஷ்டிகளுக்கிடையே உண்டான வாக்குவாதம் கைகலப்பாக மாறியது.

ஆலயம் அமைந்துள்ள உள்ளூர் கோஷ்டி ஒன்றும் அயல் கிராமக் கோஷ்டி ஒன்றுமே மோதிக்கொண்டதாகத் தெரியவந்தது.

கைகலப்பின்போது படுகாயம் அடைந்த மூவர் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். வேறு சிலரும் காயத்துக்குள்ளாகினர்.

கைகலப்பு சம்பவம் குறித்து சங்கானை காவல்துறை அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து ஆலயப் பகுதிக்கு விரைந்த காவல்துறையினர் சிலரைக் கைது செய்தனர்.

கடந்த இரு தினங்களாக குறிப்பிட்ட கிராமத்தில் நிலவிய பதற்றம் காவல்துறையினரின் தீவிர நடவடிக்கையால் தணிந்துள்ளது.

காவல்துறையினர் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (அ-135)

### நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம் ஜன. 20
யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகினால் நடத்தப்பட்டு வந்த 'பொது வாழ்வில் பிரயோக எந்திரப் பொறியியல்' தொகுதி 5க்கான நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறும். [இ]

### ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 20
தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும் ஆய்வரங்கும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும். அன்றைய ஆய்வரங்கில் ப. கனகலிங்கம் "ராகு திசை ஓர் ஆய்வு" என்ற பொருளிலும் இ. வைத்தியநாதர் 'சோதிட சிந்தனைகள்" என்ற பொருளிலும் ஆய்வுரை வழங்குவர். பயிலரங்கை கே. சாம்பசிவம் நடத்துவார். (க)

### பனிப்பாறை சரிந்து 106 பேர் பலி

ஸ்ரீநகர், ஜன. 20
ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் பனிப்பாறைச் சரிவுகளினால் 106 க்கும் அதிகமானோர் மரணமானார்கள். (அ-க 6)

### ஆணைக்குழு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பணிபுரியும் நீதியரசர்களும் மேல்நீதிமன்ற நீதிபதிகளும் ஆணையாளர்களாக இடம் பெறுவர் என்றார் அவர்.

கேள்விப் பத்திரங்களை ஆங்கீகரித்தல், ஒப்பந்தங்களை வழங்குதல் ஆகியவற்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் —

அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் ஆகியவை குறித்து ஆணைக்குழு விசாரிக்கும் என்றார் அமைச்சர் பீரிஸ்

இத்தகைய ஒழுங்கீனத்தால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு, சேதம் ஆகியவை குறித்தும் ஆணைக்குழு மதிப்பீடு செய்யும் என்றும் அவர் கூறினார். [உ]

### கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வடிக்கையையும் முறியடித்து விட முடியும் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று நம்பிக்கை தெரிவித்தன. (இ)

### காஞ்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வழி நெடுகிலும் "ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர' மந்திரம் ஒலித்த வண்ணம் இருந்தது.

இந்த விழாவில் இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் சிவராஜ் பட்டேல் கலந்து கொண்டார். (உ-க-4)

### இன்று...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
பாப்பரசர் எழுதிய நூல் சம்பந்தமாக பௌத்தர்கள் கொண்டுள்ள மனக்கிலேசங்களை பாப்பரசரிடம் நேரில் தெரிவிப்பதாக ஜனாதிபதி உறுதி அளித்தார்.

இதற்கிடையில் பௌத்த அமைப்புகளின் குற்றச்சாட்டுக்கள் குறித்து பாப்பரசர் தமது விளக்கத்தை அளிப்பாரே தவிர அவர் மன்னிப்புக்கோர மாட்டார் என்று மதகுரு ஒருவர் தெரிவித்த தாக நெதர்லாந்து வானொலி மேலும் தெரிவித்தது.

### நிரந்தர...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
கள் இயக்கத்தினர் யாத்திரிகர்களுக்காக அந்தக் கட்டணத்தை 250 ரூபாவாக குறைத்துள்ளனர்.

இராணுவத்தினரும், விடுதலைப் புலிகளும் பாப்பரசரை தரிசிக்க கொழும்பு வரும் யாத்திரிகர்களுக்குத் தேவையான அனுமதிப் பத்திரங்களை கஷ்டமின்றி வழங்கி ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள் என்றும் யாழ் ஆயர் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தார்.

### தொழில் அமைச்சர்கள் மாநாடு

புதுடில்லி, ஜன 20
உலகில் உள்ள சுமார் 80வளரும் நாடுகளின் தொழில் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று நேற்று புதுடில்லியில் ஆரம்பமாகியது.

வளரும் மற்றும் கூட்டுச் சேரா நாடுகளின் பிரதிநிதிகள் வர்த்தகம், ஊழியர்களின் உரிமைகள், நலன்கள் ஆகியன குறித்து இம் மாநாட்டில் ஒன்றிணைந்த நடவடிக்கை மேற்கொள்ள உள்ளனர். (அ-க-6)

### செசின்யா

தலைநகர் குறொஸ்னியில் உள்ள ஜனாதிபதி மாளிகை ரஷ்யப் படைகளிடம் நேற்று வீழ்ச்சி அடைந்தது.

## தண்ணீர் தாகத்தினால்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த செவ்வாய்க்கிழமை இப்பகுதி மீனவர்கள் தொழிலுக்குச் சென்றபோது ஒரு வள்ளத்தில் நானும் இன்னும் இருவருமாக மொத்தம் மூன்று பேர் சென்றோம்.

அன்றிரவு எட்டு மணி அளவில் சக்கோட்டைப் பகுதியில் தரித்து நின்று வலைப் படுக்கையைப் போட்டோம்.

இதனைத் தொடர்ந்து கடும்காற்றுடன் மழை பெய்தது.

சில மணி நேரத்தில் எமது வள்ளம் கடல் கொந்தளிப்பினால் நாகர்கோவிலை அடைந்தது. பின்னர் அங்கிருந்து தாளையடிக் கடலுக்கு சென்றது.

எமது வள்ளம் தாளையடியை அடைந்ததும் அதன் எஞ்ஜின் இயங்க மறுத்து விட்டது.

வள்ளம் முழுவதும் கடல் நீர் நிரம்பியது. அங்கிருந்த பாத்திரத்தினால் நீரை அள்ளி கடலுக்குள் ஊற்றினோம்.

இரவுச் சாப்பாடு முடிந்ததினால் உணவின்றி நாம் கஷ்டப்பட்டோம். பசிக்களை ஒரு புறம். கடும் குளிர் நடுக்கம் மறுபுறம்.

கடல் கொந்தளிப்பினால் வள்ளம் ஆட்டம் கண்டது.

நாம் மரணித்து விடுவோமோ என்று பயந்து கொண்டிருந்தோம். தண்ணீர்த் தாகத்தால் மழை நீரை ஏந்திக் குடித்தோம். மரண அவஸ்தையில் இருந்த எம்மை கடற்புலிகள் வந்து காப்பாற்றினார்கள்.

இப்படி அவர் கூறினார். [இ-173]

## வடபகுதி யாத்திரிகர்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திருந்தனர். யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு ஆலயப் பங்கு குருமார்கள் தலைமையில் யாத்திரிகர்கள் ஒன்றுகூடி யாழ் ஆயர் தலைமையில் வந்திருந்தனர்.

யாத்திரிகர்கள்நொச்சிமோட்டையிலுள்ள இராணுவத்தினரின் காவலரணை வந்தடைந்த போது வவுனியா இணைப்பதிகாரி பிரிகேடியர் பல்லேகல, கேணல் சாலிய குலதுங்க, கேணல் வீரக்கோன் ஆகியோரும்—

இரம்பைக்குள புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தையும் வவுனியா பங்குத் தந்தையுமான ரி. நவரத்தினம் ஆகியோரும் அவர்களை வரவேற்றனர்.

யாத்திரிகர்கள் அனைவரும் பாப்பரசரின் உருவப்படங்கள் பொறித்த சின்னங்களை அணிந்திருந்தனர்.

நொச்சிமோட்டையில் நடந்த வரவேற்பை அடுத்து தாண்டிக்குளத்துக்கு விசேட பஸ்களில் யாத்திரிகர்கள் கொண்டு வரப்பட்டனர்.

அங்கு விசேடமாக அமைக்கப்பட்ட அலுவலகத்தில் அவர்கள் தங்கவைக்கப்பட்டனர்.

பின்னர் ஒருவர் பின் ஒருவராக புகைப்படம் எடுக்கப்பட்டது. கொழும்பு செல்வதற்கான "பாஸ்" வழங்கப்பட்டது. இந்த விசேட "பாஸ்" வழங்குவதற்காக தமிழ் தெரிந்த சுமார் 50 பொலீஸாரும் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் துரிதமாக செயல்பட்டு யாத்திரிகர்களுக்கு காலதாமதமின்றி "பாஸ்"களை வழங்கினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தாண்டிக்குளத்தில் பாப்பரசரின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தாண்டிக்குள வீதியின் இருமருங்கும் மகர தோரணங்களினாலும் குருத்தோலையினலான சிலுவைகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

'பாஸ்' வழங்கப்பட்டதும் சில யார் தூரத்திலுள்ள தாண்டிக்குள ரயில் நிலையத்திற்கு வவுனியா போக்குவரத்து சேவைகள் பஸ்களில் யாத்திரிகர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

யாத்திரிகர்களுக்கு தாண்டிக்குளம் ரயில் நிலையத்தில் வைத்து கொழும்பு செல்வதற்கான பயணச் சீட்டு வழங்கப்பட்டது.

இவர்களது விசேட ரயில் நண்பகல் 12.55க்கு தாண்டிக்குளத்திலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டது. ரயில் சுமார் 50 ஆயுதம் தரித்த இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அனுராதபுரம், மாஹோ ஆகிய இரு ரயில் நிலையங்களில் மட்டுமே இவர்களது ரயில் தரித்து நிற்கும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த யாத்திரிகர்களுடன் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையில் முன்னதாக வவுனியா வந்திருந்த யாத்திரிகர்கள் இணைந்து ரயிலில் கொழும்பு புறப்பட்டனர்.

நேற்று வடபகுதியில் இருந்து மேலும் ஆயிரம் 500 பேரும் மடுப்பகுதியிலிருந்து 400 பேருமாகசுமார் 2 ஆயிரம்பேர் வவுனியா வருவார்கள் என்எதிர்பார்க்கப்பட்டது

இதற்கிடையில் யாத்திரிகர்களின் கொழும்புப் பயணம் பற்றி, கிளிநொச்சி, வட்டக்கச்சி தேவாலய வணக்கத்துக்குரிய தந்தை செபஸ்ரியன் கருத்துத் தெரிவிக்கையில் ஓமந்தை வரையிலான பயணத்துக்கு விடுதலைப் புலிகள் சகல வசதிகளையும் செய்து கொடுத்திருந்தனர் என்றார். (இ.4)


யாழ் வாழ் கத்தோலிக்க யுவதிகளுக்கு

ஓர் அன்பான அழைப்பு

உங்கள் வருங்காலத்தை நிர்ணயிக்க உதவும் கலந்துரையாடல், தேவ அழைத்தல் பற்றிய ஆய்வு, அழைத்தல் பெற்றவர்களின் சாட்சியம் இவை அனைத்தும் அடங்கிய நிகழ்வு ஒரு சிறிய வழிபாட்டுடன் சுண்டிக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் 21ஆம் திகதி நாளை சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 10ஆம் படிவத்தில் இருப்பவர்களும் மேற்படிப்பு முடிந்த அனைத்து பெண்பிள்ளைகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர்கள்

19-01-95. (34777)



திருத்தந்தையே வருக! திருவருளைப் பொழிக!!

தரமான முறையில் சுத்தமாக தயாரிக்கப்பட்ட

* சிற்றுண்டி வகைகளுக்கும்
* தித்திக்கும் ஐஸ்கிறீம் குளிர்பான வகைகளுக்கும்

யாழ். நகரில் பிரபல்யம் வாய்ந்தவர்கள்

லிங்கம் கூல்பார்

வெலிங்டன் சந்தி, 52, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.


## புனரமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 20
சேதமாக்கப்பட்ட இந்து ஆலயங்களை புனரமைக்கும் பணிகள் தீவிரமாக்கப்படவுள்ளன. இதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் இந்து பிரமுகர்கள் தற்போது ஈடுபட்டுள்ளார்கள்.

இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கென ஜனாதிபதி நிதியிலிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சட்டத்தரணி குமாரசாமி வினோதன் தலைமையில் இந்து பிரமுகர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று நேற்று சமய கலாசார விவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடியை அவரது அமைச்சில் சந்தித்தது. இந்து சமய செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கான செயற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. (இ-4)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்பு, அறிவு, பன்பு, வாய்மை, ஈகையால் எல்லோர் நெஞ்சங்களிலும் நீக்கமற நிறைந்து அழியா நினைவுடன் வாழும்

அமரர் சி. கதிர்காமநாதன்

(நாதன் முதலாளி)
[உரிமையாளர் தினேஸ் மரக்காலை]

அவர்களின் மறைவில் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் கவலையில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

கிராம முன்னேற்றச் சங்கம்
கட்டுடை

[8206]


## மரண அறிவித்தல்கள்

### கார்த்தியேசு நாகலிங்கம்

காரைநகர் இலந்தைச்சாலையைச் சேர்ந்த கார்த்தியேசு நாகலிங்கம் அவர்கள் 15-01 95 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கார்த்தியேசு மாரிமுத்து தம்பதிகளின் அருமைப் புதல்வனும், பராசக்தியின் அன்புக் கணவரும், புஸ்பமலர் (தாதி, யாழ் போதனா வைத்தியசாலை), சிவகுமார் (2ம் லெப். சந்திரன்), ரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசாவின் (பிரான்ஸ்) பாசமிகு மாமனாரும் நாகேஸ்வரி, கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆண்டி, டில்லிராணி, பாக்கியம், மார்க்கண்டு, காலஞ்சென்ற சிவநாயகிஅம்மா, சிவகாமி, கனகம்மா, நல்லம்மா, சவுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாழ். நாவலர் றோட், நாவாந்துறை வீதியிலுள்ள 671ம் இலக்க இல்லத்தில் இன்று (20-01-95) 12-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

இல. 671, நாவலர் றோட்,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (34783)

### கார்த்திகேசு வயிரவிப்பிள்ளை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு வயிரவிப்பிள்ளை 18-1-95 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு — நாகமணி தம்பதிகளின் அன்பு மகனும், சின்னம்மாவின், அன்புக் கணவரும், காலம் சென்றவர்களான. அன்னலிங்கம், சோமசுந்தரம், இராசையா, மகாலிங்கம், செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோரஞ்சிதம், செல்வரட்ணம் – விஜயரட்ணம் (செல்வம் பிறதேர்ஸ், மன்னார்), யோகேஸ்வரி, பவளமணி, இராசேந்திரம் (அண்ணா தொழிலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கம், புவனேஸ்வரி, செல்வராணி, சோதிமலர், காலஞ்சென்றவர்களான நடராசா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமனாரும், வதனி, குகன், சாந்தினி, ஜெயந்தினி, மோகனராஜ், பரதன், குமுதினி, அமுதன், உருத்திரகுமார், பூர்ணிமா, தயாளினி, செந்தில்குமாரி, குகன், அன்பரசி, ஜீவரசி, மணிமாறன், எழிலரசி, காண்டீபன், அருள்வாணி, சிவசங்கரன், சிந்து, றமணன், ரவிசங்கர், சாரங்கன், தாட்சாயினி, லக்ஸ்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனும், தர்ஷி, கீர்த்தனா, சயந்தன், நிஷாந்தன், ராஜதுலன், லோஜனா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
வ. இராசேந்திரம்
(மகன்)

கொக்கன்வளவு,
இணுவில் கிழக்கு,
இணுவில். (34779)

### கணபதி பொன்னு

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்டவருமான கணபதி பொன்னு நேற்றுக் காலமானார். இவர் காலம் சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், பகவதி, சுப்பிரமணியம், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், முத்திலிங்கம் (J. P), நவமணி, கணேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களாகிய வேலுப்பிள்ளை, மயில்வாகனம், இளையதம்பி, வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி ராசரட்ணம், திருமதி மகாலிங்கம், திருமதி கந்தசாமி, திருமதி மோகனதாஸ், திருமதி பாஸ்கரன் (சுவிஸ்), திருமதி பேரின்பராசா (சுவிஸ்), மற்றும் மகேந்திரன் (ஜேர்மனி), திலகவதி, நந்தகுமார், உதயகுமார், குகதாசன் (கொழும்பு), குகதேவி, மகிழ்தாஸ், சாந்ததாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், தவரூபன், விமலச்சந்திரன், சத்தியா, கிருபாகரன், கமல், அகிலா, மேனகா, கோபினாத், நதிஸ் (சுவிஸ்), விஸ்ணுபதி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 20-1-95 பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சுப்பிரமணியம்
(மகன்)

எம். எஸ். லேன்,
கோண்டாவில் கிழக்கு. (34784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ... (யாழ்ப்பாணம்) ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 3,92/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20–01–1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.